www.padippakam.com

# தொழிலாளி வர்க்கம் - கட்சி - இயல்பு பற்றி





ஸ்டாலின்
சென்யுன்

படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கக் கட்சியும்

– ஸ்டாலின்

# கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராவது எப்படி?

– சென்யுன்

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
✆ 8412367

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : மே 2000

பதிப்புரிமை : கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை – 600 002.
தொலைபேசி: 8412367

அச்சு : எழில் பிரிண்ட்ஸ்,
63/110, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.
தொலைபேசி: 4835887

விலை : ரூ. 15.00

# பதிப்புரை

"பொதுவாக பொதுவுடமைக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறேன்", முடிந்த அளவு கட்சிக்கு நன்கொடை தருகிறேன் என்பதனால் எல்லாம் ஒருவர் கம்யூனிஸ்டாக இருக்க முடியாது, இதனை ஆமோதித்து கட்சியை விருந்தினர் மாளிகையாக ஆக்குவதும் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்க முடியாது என்பதனை தோழர் ஸ்டாலின், சென்யுன் வரலாற்று ரீதியான கட்சி கட்டிய அனுபவத்திலிருந்து இந்நூலில் விளக்கியுள்ளனர். கட்சியின் திட்டத்தை ஏற்பது மட்டுமல்ல. கட்சியின் ஏதாவது ஒரு பிரிவில் இருந்து அன்றாடம் வேலை செய்பவரே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். இத்தகைய இயல்புகளையும் தன்மைகளையும் கொண்டு இயங்கும் கட்சியே உண்மையான கம்யூனிஸ்டு கட்சி என்பதனை ரசிய, சீன அனுபவ சித்திரங்களின் வாயிலாக இந்நூல் தீர்க்கமாக தெளிவுபடுத்துகிறது.

எந்த விதமான கட்சிக் கட்டுமைகளுக்கும் கட்டுப்படாமல் தனியாக இருப்பதே சுதந்திர அறிவு என்று தத்துவத் துறையில் வாழாவெட்டியாகிப் போன அறிவுப் பிழைப்பு வாதிகளும், சந்தா கொடுத்தால் போதும் என்று கையறு நிலைக்கு போய்விட்ட பல வண்ண திரிபுவாதிகளும் மலிந்திருக்கும் சூழ்நிலையில், இந்நூல் பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு சரியான கம்யூனிஸ்ட் கட்சிக்குள் அமைப்பாக்கிக் கொள்ள உதவும் என்ற நம்பிக்கையுடன் மே நாளில் இந்நூலை வாசகர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

— பதிப்பகத்தார்

படிப்பகம்

www.padippakam.com

நம்முடைய கட்சிதான் என்ன?
அது தனிநபர்கள் தற்செயலாகக்
கூடிய கதம்பக் கூட்டமா?
அல்லது தலைவர்களைக் கொண்ட
கட்டுக்கோப்பான அமைப்பா?
அது தலைவர்களின் அமைப்பாக
இருந்தால்; கட்சியில் சேராத
ஒருவரை, கட்சிக் கட்டுப்பாட்டுக்குத்
தலைவணங்குவது அவருடைய கடமை
என்று உணராத ஒருவரை, கட்சி
உறுப்பினர் என்று கருத முடியுமா?
''கட்சி ஒரு அமைப்பு அல்ல; மாறாக அது
அமைப்பாக்கப்படாத ஒரு அமைப்பு''
என்கிறார் மார்ட்டோவ்.
(எவ்வளவு அழகான மத்தியத்துவம்!)

— ஸ்டாலின்

# தொழிலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கக் கட்சியும்

— ஸ்டாலின்

''ரசியா ஒரே நாடு. அதைப் பிரிக்க முடியாது'' என்று பறைசாற்றி வந்த காலம் மாறிவிட்டது. ''பிரிக்க முடியாத ரசியா'' என்ற ஒன்று இல்லை என்பது இன்றைக்குச் சிறு குழந்தைக்கும் தெரியும். முதலாளி - தொழிலாளி என்ற நேர் எதிரான இரு வர்க்கங்களாக ரசியா முன்னரே பிளவுபட்டுப் போயிற்று. இவ்விரு வர்க்கங்களின் போராட்டமே வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணியாக அமைந்துள்ளது என்பதையும், அதைச் சுற்றி வாழ்க்கை சுழலுகிறது என்பதையும் எல்லோரும் அறிவர்.

எனினும், அண்மைக் காலம் வரை, இவற்றையெல்லாம் தெரிந்து கொள்வது கடினமாக இருந்தது. ஏனென்றால் இதுவரை தனிப்பட்ட குழுக்களையே நாம் போராட்ட அரங்கில் கண்டோம். காரணம், தனிப்பட்ட குழுக்கள் மட்டும், தனிப்பட்ட நகரங்களி லும் கிராமப்புறங்களிலும் போராட்டத்தை நடத்தி வந்தன. அதேசமயத்தில், பாட்டாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும், வர்க்கங்கள் என்ற முறையில், தெளிவாகக் காணமுடியாத நிலை யில் இருந்தன. இப்பொழுதோ நகரங்களும் மாவட்டங்களும் இணைந்து விட்டன. பாட்டாளிகளின் பல்வேறு குழுக்கள் கைகோர்த்து நிற்கின்றன. ஒன்றுபட்ட வேலை நிறுத்தங்களும் ஊர்வலங்களும் முதலாளித்துவ ரசியாவுக்கும், பாட்டாளி ரசியா வுக்கும் இடையே நடைபெறுகின்றன. மாபெரும் போராட்டத்தை நாம் நேரடியாகக் காண்கிறோம். பாட்டாளி, முதலாளி ஆகிய இரு வர்க்கங்களின் பெரிய இராணுவங்களும் பிரம்மாண்டமான போர் அரங்கில் நிற்கின்றன. இவ்விரு வர்க்கங்களுக்குமிடையே நடைபெறும் போராட்டம், நமது சமூக வாழ்க்கை முழுவதையும் அளாவி நிற்கிறது.

தலைவர்கள் இல்லாமல் ஒரு இராணுவம் செயலாற்ற முடி யாது. ஒவ்வொரு இராணுவத்திற்கும் ஒரு முன்னணிப்படை உண்டு. அந்த முன்னணிப்படையே அந்த இராணுவத்திற்கு வழி காட்டுகிறது. எனவே, இந்த இராணுவங்களுடன் இவற்றிற்கு



படிப்பகம்

www.padippakam.com

இணையான தலைவர்களும் குழுக்களும் தோன்ற வேண்டியது அவசியமாகிறது. இவை கட்சிகள் என்று சொல்லப்படுகின்றன.

இந்நிலைமையில் கீழ்கண்ட காட்சியைக் காண்கிறோம். ஒரு புறத்தில் தாராளவாதக் கட்சியின் தலைமையில் முதலாளி வர்க்க இராணுவமும், மறுபுறத்தில் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைமையில் பாட்டாளி வர்க்க இராணுவமும் அணிவகுத்து நிற்கின்றன. வர்க்கப் போராட்டத்தில் ஒவ்வொரு இராணுவத்திற்கும் அதன் சொந்தக் கட்சி தலைமை தாங்குகிறது. ரசியாவில் உள்ள பிற கட்சிகளைப் பற்றி நாம் குறிப்பிடவில்லை. ஏனென்றால் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைக்கு அது தேவையில்லை. தொழிலாளி வர்க்கக் கட்சியையும் தொழிலாளி வர்க்கத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, கட்சியின் பொது அம்சங்களைச் சுருக்கமாக எடுத்துக் காட்டும் பொருட்டே இவற்றை எல்லாம் நாம் குறிப்பிட்டோம்.

தொழிலாளி வர்க்கக் கட்சி, தலைவர்களின் போராட்டக் குழுவாக இருப்பதால் முதலாவதாக, உறுப்பினர்களைப் பொருத்தவரை பாட்டாளி வர்க்கத்தைவிட பாட்டாளி வர்க்கக் கட்சி கணிசமான அளவு சிறியதாகவே இருக்கும் என்பது தெளிவானதாகும். இரண்டாவதாக, புரிதலிலும் அனுபவத்திலும் பாட்டாளி வர்க்கக் கட்சியானது பாட்டாளி வர்க்கத்தை விட சிறந்து விளங்க வேண்டும். மூன்றாவதாக, பாட்டாளி வர்க்கக் கட்சி கட்டுக்கோப்பான அமைப்பாக இருக்க வேண்டும்.

மேலே சொல்லியவற்றிற்கு ஆதாரம் அவசியமில்லை. ஏனெனில், முதலாளித்துவம் இருக்கும் வரை, அதன் உடன்பிறந்த வியாதியான வறுமையும் பொதுமக்களிடம் பிற்போக்குத் தன்மையும் இருந்தே தீரும். அதுமட்டுமல்ல, முதலாளித்துவம் உயிரோடு இருக்கும்வரை, தொழிலாளி வர்க்கம் முழுவதும் அவசியமான அளவுக்கு வர்க்க உணர்வு பெறமுடியாது. எனவே, தொழிலாளி வர்க்க இராணுவத்திற்குச் சோசலிச உணர்வை வளர்க்கவும், அதன் போராட்டத்தில் அதனை ஒற்றுமைப்படுத்தித் தலைமை தாங்கவும் வர்க்க உணர்வுள்ள தலைமைக் குழு அவசியம். போராடும் தொழிலாளி வர்க்கத்தை தலைமையேற்று நடத்த முன்வந்துள்ள ஒரு கட்சி, தனிநபர்கள் தற்செயலாகச் சேர்ந்த கதம்பக் கூட்டமாக இருக்கக் கூடாது. அது கட்டுக்கோப்பான அமைப்புடன் கூடிய மத்தியத்துவம் வாய்ந்த அமைப்பாக இருத்தல் வேண்டும். அப்படி இருந்தால்தான், அதை ஒரு ஒற்றைத் திட்டத்தின்படி இயக்க முடியும்.



இதுவே நமது கட்சியின் பொது அம்சங்களின் சுருக்கம்.

இவைகளையெல்லாம் மனதிற்கொண்டு நாம் முக்கிய கேள்விக்குச் செல்வோம். யாரைக் கட்சி உறுப்பினர் என்று சொல்லலாம்? இக்கட்டுரையின் உள்ளடக்கம் கட்சி விதிகளின் முதலாவது பத்தியைப் பற்றியது.

ஆதலால் நாம் இக்கேள்வியைப் பற்றி ஆராய்வோம்.

எவரை ரசிய சமூக ஜனநாயக தொழிற்கட்சி உறுப்பினர் என்று சொல்லலாம்? அதாவது கட்சி உறுப்பினரின் கடமைகள்தான் என்ன?

நமது கட்சி, சமூக ஜனநாயக கட்சி. இதன் பொருள் இக்கட்சிக்கு ஒரு திட்டம் (இயக்கத்தைப் பற்றிய உடனடிக் குறிக்கோளும் இறுதிக் குறிக்கோளும்) உண்டு என்பதாகும். அதற்கென செயல் தந்திரங்கள் (போராட்ட வழிகள்) உண்டு. அதற்கென அமைப்புக் கோட்பாடு (அமைப்பு உருவம்) உண்டு. திட்டம், செயல் தந்திரம், அமைப்புக் கோட்பாடுகள் ஆகிய இவை மூன்றின் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் நமது கட்சி கட்டப்பட்டுள்ளது. இக்கருத்துக்களின் ஒருமைப்பாட்டில் மட்டுமே, கட்சி உறுப்பினர்களை ஒரு மத்தியத்துவம் வாய்ந்த கட்சியில் ஒற்றுமைப்படுத்த முடியும். கருத்து ஒற்றுமை குலைந்தால் கட்சியும் சீர்குலைந்து விடும். எனவே, கட்சியின் திட்டத்தையும், செயல் தந்திரங்களையும், அமைப்புக் கோட்பாடுகளையும் முழுக்க முழுக்க ஒப்புக் கொள்கிறவரை மட்டுமே, கட்சி உறுப்பினர் என்று கூற முடியும். நமது கட்சித் திட்டத்தை நன்றாகப் படித்து, அத்திட்டத்தையும் செயல் தந்திரங்களையும் அமைப்புக் கண்ணோட்டங்களையும் முற்றாக ஏற்றுக் கொள்கிறவர்தான் நமது கட்சியின் அணிவரிசையில் இருக்க முடியும். தொழிலாளி வர்க்க இராணுவத்தின் தலைவர்களின் வரிசையில் இருக்க முடியும்.

கட்சி உறுப்பினர் ஒருவர் கட்சியின் திட்டத்தையும், செயல் தந்திரங்களையும், அமைப்புக் கண்ணோட்டங்களையும் ஒப்புக் கொண்டால் மட்டும் போதுமா? அத்தகைய ஒருவரைப் பாட்டாளி வர்க்க இராணுவத்தின் உண்மையான தலைவர் என்று கருத முடியுமா? நிச்சயமாகக் கருத முடியாது. உலகில் ஏராளமான வாய்வீச்சுக்காரர்கள் இருக்கின்றனர். அவர்கள் கட்சியின் திட்டத்தையும், செயல் தந்திரங்களையும், அமைப்புக் கோட்பாடுகளையும் சிறிதும் தயக்கமின்றி "ஒப்புக் கொள்வர்". ஆனால் அவர்கள் வேறெதுவும் செய்ய இயலாதவர்கள் - வெறும் வாய்வீச்சுக்காரர்களே. அத்தகைய வாயாடிகளைக் கட்சி உறுப்பினர் (அதாவது



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளி வர்க்க இராணுவத்தின் தலைவர்) என்று சொல்வது கட்சியின் அப்பழுக்கற்றத் தன்மைக்கு மாசு விளைவிப்பதாகும்! மேலும் நமது கட்சி வெறும் வேதாந்தப் பள்ளியோ, மதக் குழுவோ அல்ல. நமது கட்சி போராடும் கட்சி அல்லவா? ஆம், அது ஒரு போராட்டக் கட்சியே. எனவே, கட்சியின் திட்டத்தையும், செயல் தந்திரங்களையும், அமைப்புக் கோட்பாடுகளையும் சொல் அளவில் ஒருவர் ஒப்புக் கொள்வதால் மட்டும், நமது கட்சி நிறைவு அடைய முடியாது. ஏற்றுக் கொண்டக் கோட்பாடுகளை நடைமுறையில் கையாள வேண்டும் என்று கட்சி உறுப்பினர்களிடம் நிச்சயமாக நம் கட்சி கோரும். நமது கட்சியில் எவர் ஒருவர் உறுப்பினராக இருக்க விரும்புகிறாரோ, அவர் நமது கட்சித் திட்டத்தையும் செயல் தந்திரத்தையும் அமைப்புக் கோட்பாடுகளையும் ஒப்புக் கொள்வதோடு நிறைவடைந்துவிட முடியாது. அக் கோட்பாடுகளை நடைமுறையில் நிறைவேற்ற அவர் செயலாற்ற வேண்டும்.

கட்சி உறுப்பினர் ஒருவர் கட்சியின் கோட்பாடுகளை நிறை வேற்றுவது என்றால் என்ன? அவர் இந்தக் கோட்பாடுகளை எப்பொழுது கையாள முடியும்? அவர் போராடும் பொழுதும், தொழிலாளி வர்க்க இராணுவத்திற்குத் தலைமை தாங்கி, கட்சியுடன் அணிவகுத்துச் செல்லும் பொழுதுமே நிறைவேற்ற முடியும். சிதறிக் கிடக்கும் தனி நபர்களால் தன்னந்தனியாகப் போராட்டத்தை நடத்த முடியுமா? நிச்சயமாக முடியாது! அதற்கு மாறாக, மக்கள் முதலாவது ஒற்றுமைப்படுகிறார்கள். அமைப்பை அமைக்கிறார்கள். அதன் பிறகுதான் அவர்கள் போரில் இறங்குகிறார்கள். இப்படிச் செய்யவில்லை என்றால், எல்லாப் போராட்டமும் பலனற்றதாகிவிடும். எனவே, ஒரு கட்டுக்கோப்பான அமைப்பில் ஒன்றுபட்டால்தான் கட்சி உறுப்பினர்கள் போராடவும், கட்சியின் கோட்பாடுகளை நடைமுறையில் நிறைவேற்றவும் முடியும். கட்சி உறுப்பினர்கள் ஐக்கியப்படுகிற அமைப்பு எவ்வளவிற்கு அதிகமாக கட்டுக்கோப்புடன் இருக்கிறதோ, அந்த அளவிற்கு அவர்கள் சிறந்த முறையில் போராட முடியும். அதன் விளைவாக, கட்சியின் திட்டத்தையும், அமைப்புக் கோட்பாடுகளையும், செயல் தந்திரங்களையும் நடைமுறையில் கையாள முடியும். இதனால்தான் நம்முடைய கட்சி தனிநபர்களை கொண்ட கதம்பக் கட்சி அல்ல, தலைவர்களைக் கொண்ட அமைப்பு என்று அழைக்கப்படுகிறது. நமது கட்சி, தலைவர்களைக் கொண்ட ஒரு அமைப்பு என்ற முறையில், தங்கள் நலன்களை கட்சி நலன்களுக்கும் உட்படுத்திக் கட்சியுடன் ஒன்றுபட்டு, இந்த அமைப்பில் செயல்லாற்றுகிறவர்கள் மட்டும்தான் இந்தக் கட்சியின், இந்த அமைப்பின் உறுப்பினர்கள் என்று கருதப்படுவர்.



எனவே, ஒருவர் கட்சியில் உறுப்பினராக இருப்பதற்கு, கட்சியின் திட்டத்தை, செயல் தந்திரத்தை, அமைப்புக் கோட்பாடுகளை நடைமுறையில் கையாள வேண்டும். கட்சியின் கொள்கைகளைக் கையாள ஒருவர் போராடியாக வேண்டும். இந்தக் கோட்பாடுகளுக்குப் போராட, கட்சியின் அமைப்பில் வேலை செய்ய வேண்டும். கட்சியுடன் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும். கட்சியின் உறுப்பினராக இருப்பதற்கு ஒருவர் கட்சி அமைப்புகள் ஏதாவது ஒன்றில் இருக்க வேண்டும். கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் சேர்ந்து, தனது சொந்த நலன்களைக் கட்சியின் நலன்களோடு ஐக்கியப்படுத்தினால்தான், கட்சி உறுப்பினர்களாகவும் தொழிலாளி வர்க்க இராணுவத்தின் உண்மையான தலைவர்களாகவும் இருக்க முடியும்.

நமது கட்சி வெறும் வாய்வீச்சுக்காரர்களின் கதம்பக் கூட்டமாக இல்லாமல், தொழிலாளி வர்க்க இராணுவத்தை அதன் மையக் குழுவின் மூலம் நடத்திச் செல்லத் திறமை வாய்ந்த தலைவர்களைக் கொண்ட அமைப்பாக இருந்தால், மேலே சொல்லிய அனைத்தும் அதற்குப் பொருந்தும்.

கீழே குறிப்பிடுகின்றவற்றையும் நாம் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதுவரை நமது கட்சி வருகின்றவர்களை இன்முகம் காட்டி ஏற்றுக் கொள்ளும் ஒரு விருந்தோம்பும் தந்தை வழிக் குடும்பம் போன்று ஆதரவு தெரிவிக்கிற எவரையும் கட்சியில் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருந்தது. ஆனால் இப்பொழுது நமது கட்சி ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாகி விட்டது. தந்தைவழிக் குடும்பப் பண்பைத் தூர எறிந்துவிட்டு, எல்லா அம்சங்களிலும் அது ஒரு கோட்டையாக மாறிவிட்டது. தகுதி உள்ளவர்களுக்கு மட்டும் அந்தக் கோட்டையின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இது நமக்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. "தொழிற்சங்க வாதம்", தேசியவாதம், மதவாதம் போன்றவற்றின் மூலம், எதேச்சதிகாரிகள் பாட்டாளிகளின் வர்க்க உணர்வைக் களங்கப்படுத்தவும், மிதவாதத் தன்மை கொண்ட அறிவாளிகள் பாட்டாளிகளின் அரசியல் சுதந்திரத் தன்மையை அழித்து, அவர்கள் மீது தமது ஆதிக்கத்தை நிலைநாட்டவும் முயலுகின்ற காலத்தில், நாம் மிக மிக விழிப்புடன் இருக்க வேண்டும். நமது கட்சி ஒரு கோட்டை என்பதையும் சோதனையில் தேறியவர்களுக்கு மட்டுமே அதன் கதவுகள் திறக்கும் என்பதையும் நாம் ஒரு பொழுதும் மறந்துவிடக் கூடாது.

கட்சியில் உறுப்பினர் ஆவதற்கு இரண்டு நிபந்தனைகள் அவசியம் என்பதை, நாம் தெரிந்து கொண்டோம். (ஒன்று



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்தை ஏற்றுக் கொள்வது; மற்றொன்று, கட்சி அமைப்பில் வேலை செய்வது) இவற்றுடன் கட்சி உறுப்பினர் கட்சிக்குப் பொருள் உதவி செய்ய வேண்டும் என்ற மூன்றாவது நிபந்தனையையும் சேர்த்துக் கொண்டால், ஒருவர் கட்சியில் உறுப்பினராக இருப்பதற்குரிய உரிமையைப் பெறுகிறார்.

ஒவ்வொரு சிக்கலான உயிரியும் கணக்கிடப்படமுடியாத மிக மிக எளிமையான உயிரிகளால் ஆக்கப்பட்டுள்ளது போல, நமது கட்சியும் ஒரு சிக்கலான, பொது அமைப்பாகையால் கட்சிப் பேராயம் அல்லது மையக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட எண்ணற்ற மாவட்ட மற்றும் உள்ளூர் கட்சிக் குழுக்களால் கட்டப்பட்டதாகும். இந்தக் குழுக்கள் மட்டும் கட்சி அமைப்புகள் என அழைக்கப்படுவதில்லை. ஒரு ஒற்றைத் திட்டத்தின்படி இந்த அமைப்புகளை இயக்க மையக் குழு இருக்கின்றது. இதன் மூலம் இந்த உள்ளூர் கட்சி அமைப்புகள் ஒரு பெரிய மையப்படுத்தப்பட்ட அமைப்பாக கட்டப்படுகின்றது.

எனவே, ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சியின் உறுப்பினர் எனப்படுபவர், இக்கட்சியின் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, கட்சிக்குப் பொருளுதவி செய்து, கட்சி அமைப்புகள் ஏதாவது ஒன்றில் வேலை செய்பவராக இருக்க வேண்டும்.

தோழர் லெனின்* வரைந்த கட்சி விதிகளின் முதலாவது பத்தி இம்முறையில்தான் எழுதப்பட்டது.

நமது கட்சி தனி நபர்களின் கதம்பக் கூட்டம் அல்ல. அது ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு என்ற கண்ணோட்டத்திலிருந்து தான் இந்தச் சூத்திரம் முழுமையாகத் தோன்றியது. இந்தச் சூத்திரத்தின் தலைசிறந்த தன்மை இதில்தான் அடங்கியுள்ளது.

லெனின் வகுத்த சூத்திரம் ''குறுகியது'', ''வசதிக் குறைவானது'' என்ற காரணத்தினால், சில தோழர்கள் அதை நிராகரித்து விட்டு, தங்களுடைய சொந்த சூத்திரத்தைச் செயல்படுத்துகிறார்கள். அவர்களுடையதை குறுகியதோ, வசதிக் குறைவானதோ அல்ல என்று நாம் கொள்ள வேண்டும் போலும். மார்ட்டோவின்** சூத்திரத்தைப் பற்றியே நாம் இங்கு குறிப்பிடுகிறோம். இப்போது அதை ஆராய்வோம்.

மார்ட்டோவ் வகுத்துள்ள சூத்திரம் இதுதான்: ''ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சித் திட்டத்தை ஒப்புக் கொண்டு, கட்சிக்குப் நிதியளித்து, கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றின் வழிகாட்டுதலின்படி தனிப்பட்ட உதவிகளை முறையாகச் செய்பவர் அக்கட்சியின் உறுப்பினர். கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் வேலை செய்ய வேண்டியது கட்சி உறுப்பினர்கள் கடமை,



என்ற மூன்றாவது முக்கியமான நிபந்தனையை இந்தச் சூத்திரம் விட்டு விடுகிறது. இந்தத் திட்டவட்டமான முக்கியமான நிபந்தனை அவசியமில்லாதது என்று மார்ட்டோவ் கருதுகிறார் போலும். அவர் அதற்குப் பதில் ''கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றின் கட்டளைப்படி தனிப்பட்ட உதவி செய்வது'' என்ற தெளிவில்லாத, வரையறையற்ற விதியைப் புகுத்துகிறார். ஒருவர் கட்சி அமைப்பு எதிலும் அங்கம் வகிக்காமல் கட்சியில் உறுப்பினராக இருக்கலாம் போலும்! (அடடா! என்ன அற்புதமான கட்சி!) கட்சியின் விருப்பத்திற்கு கீழ்ப்படியாமலே கட்சியில் உறுப்பினராக இருக்கலாம். (ஆஹா! என்ன அருமையான கட்சிக் கட்டுப்பாடு!) சரி, எந்த ஒரு அமைப்பிலும் இல்லாமல், கட்சி கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற உணர்வும் இல்லாதவர்களிடம் கட்சி எப்படி 'ஒழுங்காக' வேலை வாங்க முடியும்?

கட்சி விதிகளின் முதலாவது பத்தி தொடர்பான மார்ட்டோவின் சூத்திரத்தை இக்கேள்வி உடைத்தெறிகிறது. ஆனால், லெனினுடைய சூத்திரத்தில் மிக உன்னதமான முறையில் இக்கேள்விக்கு பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்சி உறுப்பினருக்குரிய மூன்றாவது முக்கியமான நிபந்தனையான, ஒருவர் கட்சி அமைப்பு ஒன்றில் அவசியம் வேலை செய்ய வேண்டும் என்பது லெனின் சூத்திரத்தில் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

எனவே ''கட்சி அமைப்புகள் ஏதாவது ஒன்றின் கட்டளைப்படி தனிப்பட்ட உதவி செய்ய வேண்டும்'' என்ற மார்ட்டோவின் சூத்திரம் தெளிவில்லாதது, பொருளற்றது என்ற முறையில் அதை நாம் உதறித் தள்ள வேண்டியதுதான். இந்த நிபந்தனையைத் தள்ளிவிட்டால் மார்ட்டோவின் சூத்திரத்தில் மீதமுள்ளவை இரண்டு நிபந்தனைதான் (திட்டத்தை ஏற்றுக் கொள்வதும், நிதி உதவியும்). இவைகள் மாத்திரம் போதும் என்றால், அவை பலனற்றவைகளே! ஏனெனில், ஒவ்வொரு வாய்வீச்சுக்காரனும் கட்சித் திட்டத்தை ''ஒப்புக் கொண்டு'' நிதி உதவியும் செய்யலாம். இதனால் மட்டும் ஒருவர் கட்சி உறுப்பினர் ஆவதற்குச் சிறிதும் அருகதை கிடையாது.

இது ஒரு 'வசதியான' சூத்திரம் என்றுதானே சொல்ல வேண்டும்!

உண்மையான கட்சி உறுப்பினர்கள் கட்சித் திட்டத்தை ஒப்புக் கொண்டால் மட்டும் போதாது. அவர்கள் ஒப்புக் கொண்ட திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்றத் தவறக் கூடாது என்று நாம் சொல்கிறோம். மார்ட்டோவ் சொல்வதாவது: ''நீங்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறீர்கள். கட்சி உறுப்பினர் ஒப்புக் கொள்ளும் திட்டத்தை நடைமுறையில் செயலாற்ற வேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

என்பது அவ்வளவு அவசியமில்லை. கட்சிக்கு நிதி கொடுக்க விரும்புவதும் இன்ன பிறவும் போதும்.'' இதன்மூலம் சில வாய்வீச்சு சமூக ஜனநாயகவாதிகளுக்காக மார்ட்டோவ் அனுதாபப் படுகிறார் என்று தோன்றுகிறது. எனவே, அவர்களைக் கட்சியில் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார் என்று தெரிகிறது.

மேலும் நாம் ஆராய்வோம். கட்சித் திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்றப் போராட்டம் அவசியம். ஐக்கியமின்றிப் போராடுவது சாத்தியமில்லை. கட்சி அமைப்பு ஒன்றில் சேர்ந்து தனது நலன்களைக் கட்சி நலன்களுடன் ஐக்கியப்படுத்தி, கட்சியுடன் ஒன்றுபட்டு, தொழிலாளி வர்க்க இராணுவத்தின் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவது கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரின் கடமையாகும். அதாவது கட்டுப்பாடான, மையப்படுத்தப்பட்ட கட்சிப் படையில் அவர் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் ''கட்சி உறுப்பினர்கள் கட்டுப்பாடான முன்னணிப் படையில் சேர்ந்து அமைப்பு ரீதியாக ஒற்றுமைப்பட வேண்டியது அவ்வளவு அவசியமில்லை. தன்னந்தனியாக போராடுவதே போதுமானது'' என்கிறார் மார்ட்டோவ்.

அப்படியானால் நம்முடைய கட்சிதான் என்ன? அது தனிநபர்கள் தற்செயலாகக் கூடிய கதம்பக் கூட்டமா? அல்லது தலைவர்களைக் கொண்ட கட்டுக்கோப்பான அமைப்பா? அது தலைவர்களின் அமைப்பாக இருந்தால், கட்சியில் சேராத ஒருவரை, கட்சிக் கட்டுப்பாட்டுக்குத் தலைவணங்குவது அவருடைய கடமை என்று உணராத ஒருவரை, கட்சி உறுப்பினர் என்று கருத முடியுமா? ''கட்சி ஒரு அமைப்பு அல்ல. மாறாக அது அமைப்பாக்கப்படாத ஒரு அமைப்பு'' என்கிறார் மார்ட்டோவ். (எவ்வளவு அழகான மத்தியத்துவம்!)

எனவே, நமது கட்சி ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பு அல்ல; மாறாக, கட்சித் திட்டம் போன்ற நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கின்ற தனிப்பட்ட சமூக ஜனநாயகவாதிகளும் உள்ளூர் (கட்சி) அமைப்புகளும் அடங்கியதொரு கதம்பக் கூட்டம் என்பது மார்ட்டோவின் கருத்து. ஆனால் நமது கட்சி ஒரு மையப்படுத்தப்பட்ட அமைப்பாக இருக்கவில்லையானால் புடம் போட்டு எடுக்கப்பட்ட நபர்களுக்கு மட்டுமே திறக்கப்படும் கோட்டையாக அது இருக்க முடியாது. உண்மையில் கட்சி ஒரு கோட்டை அல்ல; அது ஒவ்வொரு ஆதரவாளரும் தாராளமாக நுழையக்கூடிய ஒரு விருந்துக் கூடம் என்பது மார்ட்டோவின் சூத்திரத்திலிருந்து தெளிவாகிறது. சொற்ப அறிவு, அதே அளவு அனுதாபம், சிறிது பண உதவி — இவ்வளவே அங்கு போதும், நீங்கள் கட்சி உறுப்பினர் என்று பரிபூரண உரிமை கொண்டாடுவதற்கு பீதி அடைந்துள்ள



''கட்சி உறுப்பினர்களை'' ஊக்குவிக்க மார்ட்டோவ் கூறுவதாவது: ''ஒருவர் கட்சி அமைப்பு ஒன்றில் இருக்க வேண்டும். தனது நலன்களைக் கட்சியின் நலன்களுக்கு உட்படுத்த வேண்டும் எனக் கூறுபவர்களின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காதீர்கள். முதலாவது, இந்த நிபந்தனையை ஒருவர் ஏற்றுக் கொள்வது கடினமான விசயம். ஒருவருடைய நலன்களைக் கட்சியின் நலன்களுக்கு உட்படுத்துவது என்பது வெறும் வேடிக்கை அல்ல! இரண்டாவது, எனது விளக்கத்தில் முன்னமே சுட்டிக் காட்டியதைப் போன்று இவர்களின் அபிப்பிராயம் தவறானது. ஆதலால் கனவான்களே! விருந்து மாளிகைக்கு வருகை செய்யுங்கள். உங்கள் வரவு நல்வரவாகுக!''

தமது நலன்களை கட்சியின் நலன்களுக்கு உள்ளாக்க விரும்பாத சில பேராசிரியர்களுக்காகவும் உயர் பள்ளி மாணவர்களுக்காகவும் மார்ட்டோவ் வருந்துகிறார் போலும்! எனவேதான், அந்த கண்ணியமான சீமான்கள் நமது கட்சிக்குள் கள்ளத்தனமாக நுழைவதற்காக, அவர் எமது கட்சியின் அரணில் கன்னம் வைக்க முயற்சிக்கிறார். வர்க்க உணர்வுள்ள தொழிலாளி வர்க்கத்தை ஆயிரக்கணக்கான விரோதிகள் தாக்குகின்ற காலத்தில் சந்தர்ப்பவாதம் உள்ளே புகுவதற்கு அவர் கட்சியின் கதவைத் திறந்து விடுகிறார்!

இது மட்டுமல்ல, மற்றொரு புறத்திலிருந்தும் நமது கட்சியில் சந்தர்ப்பவாதம் தோன்றுவதற்கு மார்ட்டோவின் தெளிவற்ற சூத்திரம் வழி செய்கிறது.

கட்சியின் திட்டத்தை ஒப்புக் கொள்வதை மட்டும்தான் மார்ட்டோவின் சூத்திரம் குறிப்பிடுகிறது. செயல் தந்திரத்தைப் பற்றியோ அமைப்பைப் பற்றியோ அதில் ஒரு வார்த்தைக் கூட இல்லை. கட்சியின் ஒற்றுமைக்கு, திட்டத்தைப் பற்றிய கருத்து ஒற்றுமையை விட, செயல்தந்திரம் மற்றும் அமைப்புக் கண்ணோட்டங்கள் பற்றிய ஒற்றுமை எந்த வகையிலும் குறைந்ததல்ல. தோழர் லெனினுடைய சூத்திரத்திலும் இதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையே என்று சொல்லக்கூடும். ரொம்பவும் சரி! தோழர் லெனினுடைய சூத்திரத்தில் அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. கட்சி அமைப்பு ஒன்றில் வேலை செய்வதன் காரணமாக, ஒருவர், கட்சியுடன் சேர்ந்து போராடி கட்சிக் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப்படிந்து கட்சியின் செயல் தந்திரங்களையும் அமைப்பு கோட்பாடுகளையும் பின்பற்றுவதைத் தவிர, பிற செயல் தந்திரங்களையும் அமைப்பு கோட்பாடுகளையும் பின்பற்ற முடியாது என்பது சொல்லாமலே விளங்கவில்லையா? கட்சியின் திட்டத்தை மட்டுமே ஒப்புக் கொண்டு, எந்த ஒரு கட்சி



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பிலும் இல்லாத "கட்சி உறுப்பினரைப்" பற்றி என்ன சொல்வது?

செயல் தந்திரம், அமைப்பு குறித்த "உறுப்பினரின் கருத்து", கட்சியின் கருத்தாகத்தான் இருக்கும், வேறொன்றாக இராது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது? மார்ட்டோவின் சூத்திரம் இதை விளக்கவில்லை! மார்ட்டோவின் சூத்திரத்தின் விளைவாக நமது கட்சி ஒரு விசித்திரமான "கட்சி" ஆக இருக்கும்! அதன் உறுப்பினர்கள் ஒரே திட்டத்தை ஒப்புக் கொள்வார்கள். (இதுவும் சந்தேகம்தான்!) ஆனால், செயல் தந்திரம், அமைப்பு சம்பந்தமான கருத்துக்களில் அவர்களுக்குள் மாறுபாடு இருக்கும்! அடடா! நமது கட்சிக்கும் விருந்துக் கூட்டத்திற்கும் ஏதாவது வேறுபாடு இருக்க முடியுமா?

நாம் ஒரே ஒரு கேள்வி கேட்க விரும்புகிறோம்: கட்சியின் இரண்டாவது பேராயம் நமக்களித்த தத்துவம் மற்றும் நடைமுறை மத்தியத்துவத்தை நாம் என்ன செய்வது? அது மார்ட்டோவ் சூத்திரத்தோடு முற்றிலும் முரண்படுகிறதே? நாம் அதைத் தூக்கி எறிவதா? இவ்விரண்டில் எதைத் தூக்கி எறிவது என்ற கேள்வி எழுந்தால், சந்தேகமின்றி மார்ட்டோவின் சூத்திரத்தைத் தூக்கி எறிய வேண்டியதுதான்.

தோழர் லெனின் சூத்திரத்திற்கு எதிராக நமக்குத் தரப்படுகிற மார்ட்டோவின் அபத்தமான சூத்திரம் இத்தகையதே! மார்ட்டோவின் சூத்திரத்தை ஒப்புக் கொண்டு கட்சியின் இரண்டாவது பேராயம் நிறைவேற்றிய தீர்மானம் மிகப் பெரும் தவறாகும் என்பது நமது கருத்து. கட்சியின் மூன்றாவது பேராயம், இரண்டாவது பேராயத்தின் தவறைத் திருத்துவதோடு லெனினுடைய சூத்திரத்தை நிறைவேற்றும் என்றும் நாம் நம்புகிறோம்.

நாம் இனி இதுவரை கூறியதைச் சுருக்கமாகத் தொகுத்துரைப் போம். தொழிலாளி வர்க்க இராணுவம் போர் அரங்கில் புகுந்து விட்டது. ஒவ்வொரு இராணுவத்திற்கும் முன்னணிப்படை அவசியமாக இருப்பதைப் போன்று, இந்த இராணுவத்திற்கும் ஓர் முன்னணிப்படை இருக்க வேண்டியது அவசியமாயிற்று. எனவே தான் தொழிலாளி வர்க்கத் தலைவர்களின் குழுவான ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி தோன்றியது. ஒரு திட்டவட்டமான இராணுவத்தின் முன்னணிப்படை என்ற முறையில் இந்தக் கட்சி முதலாவது, தன்னுடைய சொந்தத் திட்டம், செயல் தந்திரம், அமைப்புக் கோட்பாடு இவற்றைத் தனக்கு ஆயுதங்களாகத் தரித்துக் கொள்ள வேண்டும். இரண்டாவது, அது ஒரு கட்டுக் கோப்பான அமைப்பாக இருக்க வேண்டும். ரசிய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் எவர் உறுப்பினராக இருக்க முடியும் என்ற



கேள்விக்கு இந்தக் கட்சி கூறும் ஒரே பதில் இதுதான்: கட்சியின் திட்டத்தை ஒப்புக் கொண்டு, கட்சிக்கு நிதி உதவி செய்து, கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் வேலை செய்கிற ஒருவரைத்தான் இந்தக் கட்சியின் உறுப்பினர் என்று கூற முடியும்.

இந்தத் தெளிவான உண்மையைத்தான் லெனின் அவருடைய அற்புதமான சூத்திரத்தில் கூறியிருக்கிறார்.

★ ☆ ★

---

*1905, ஜனவரி 1-இல் தோழர் ஸ்டாலின், "தொழிலாளியின் போராட்டம்" என்ற ஏட்டின் எட்டாவது இதழில் எழுதிய கட்டுரை.*

(ஸ்டாலின் தேர்வு நூல், தொகுதி 1, பக். 63 - 74.)

---

★ ☆ ★

## குறிப்புகள்

★ லெனின் புரட்சிகர சமூக ஜனநாயகத்தின் புகழ்பெற்ற கோட்பாட்டாளரும் நடைமுறைத் தலைவரும் ஆவார்.

★★ மார்ட்டோவ் "இஸ்க்ரா" ஏட்டின் முன்னாள் ஆசிரியர்களில் ஒருவர். பின்னாளில் திருத்தல்வாத தலைவராக சீரழிந்து போனவர்.



படிப்பகம்

www.padippakam.com

# கட்சி இயல்பு பற்றி

— ஸ்டாலின்

கட்சியை வலுப்படுத்துவது மற்றும் போல்ஷ்வியமாக்குவது என்பதன் பொருள், கருத்து வேறுபாடு கொண்டவர்களை எல்லாம் கட்சியிலிருந்து வெளியேற்றுவதுதான் என்று சில தோழர்கள் கருதுகிறார்கள். இது தவறு என்று நான் உறுதிபட கூறுகிறேன். உழைக்கும் வர்க்கத்தின் பருண்மையான தேவைகளுக்காக நடக்கும் அன்றாட போராட்டங்களின் மூலமாக மட்டுமே, சமூக ஜனநாயகத்தை அம்பலப்படுத்தவும் அவர்களை உழைக்கும் வர்க்கத்தினரிடையே முக்கியத்துவமற்ற ஒரு சிறுபான்மையினராக குறைக்கவும் முடியும். உழைக்கும் வர்க்கத்தின் பொருளாயத மற்றும் அரசியல் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான அன்றாட போராட்டத்தின் அடிப்படையில்தான் சமூக ஜனநாயகவாதிகளை ஏளனத்திற்குரியவர்களாக ஆக்க வேண்டுமேயொழிய, அந்தரத்தில் தொங்கும் பிரச்சினைகளின் அடிப்படையில் அல்ல. இந்தப் பணியில் ஊதியம், வேலைநேரம், குடியிருப்பு நிலைமைகள், காப்பீடு, வரிவிதிப்பு, வேலையின்மை, வாழ்க்கைச் செலவுகள் ஏறிக் கொண்டே போவது மற்றும் இன்னபிற பிரச்சினைகள், தீர்மானகரமான பாத்திரத்தை ஆற்றாவிட்டாலும் மிகமிக முக்கியமான பாத்திரத்தை ஆற்ற வேண்டும். இந்தப் பிரச்சினையின் அடிப்படையில், சமூக ஜனநாயகவாதிகளின் துரோகங்களை அம்பலப்படுத்தி ஒவ்வொரு நாளும் தாக்க வேண்டும். இவ்வாறுதான் அந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

ஜெர்மனியின் சர்வதேசிய மற்றும் தேசிய நிலைமைகளின் அடிப்படைப் பிரச்சினைகளோடு இந்த அன்றாட நடைமுறைப் பிரச்சினைகள் இணைக்கப்படாவிடில், கட்சி தனது எல்லா வேலைகளிலும் புரட்சியின் நிலைப்பாட்டிலிருந்தும் பாட்டாளி வர்க்கம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற நோக்கிலிருந்தும் அன்றாடப் பிரச்சினைகளைக் கையாளத் தவறினால், மேலே சொன்ன பணியை முழுமையாகச் செய்ய முடியாது.

கட்சியை வலுப்படுத்துவதற்கு சமூக ஜனநாயகத்தின் ஒவ்வொரு தவறையும் தனக்கு சாதகமாக பயன்படுத்துவதில் போதுமான அனுபவம் பெற்ற ஊழியர்களால் தலைமை தாங்கப்படு



கின்ற ஒரு கட்சியால் மட்டுமே; பகுதி வெற்றிகளின் காரணமாக புரட்சிகர வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பார்க்கத் தவறாமல் இருக்க போதுமான கோட்பாட்டுப் பயிற்சியைப் பெற்றிருக்கிற கட்சியால் மட்டுமே, இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும்.

இந்த விசயம்தான், ஜெர்மன் பொதுவுடைமைக் கட்சி உட்பட, பொதுவாக எல்லாப் பொதுவுடைமைக் கட்சிகளுக்கும் தலைமை ஊழியர்கள் பற்றிய பிரச்சினை போல்ஷ்வியமாதலுக்கான ஓர் உயிர்நாடிப் பிரச்சினையாக இருக்கிறது என்பதை எல்லாவற்றிற்கும் முதலாக விளக்குகிறது.

கட்சியை போல்ஷ்விய தன்மை கொண்டதாக ஆக்க குறைந்தபட்சம் சில அடிப்படையான நிபந்தனைகளையாவது நிறைவேற்றுவதென்பது அவசியம். இல்லாவிடில் பொதுவுடைமைக் கட்சிகளை போல்ஷ்விய தன்மை கொண்டதாக ஆக்குவதென்பது சாத்தியமில்லை.

1. சமூக ஜனநாயகக் கட்சி உண்மையில் நாடாளுமன்றத் தேர்தல் இயந்திரத்தின் தொங்கு சதையாக தன்னைக் கருதி நடக்கிறது. சில அராஜக - சிண்டிகலிச கும்பல்கள் சில சமயங்களில் தொழிற்சங்கங்களின் இலவச இணைப்பாக கட்சி தன்னைக் கருதி நடக்க வேண்டும் என்று கூறுகின்றனர். பொதுவுடைமைக் கட்சி மேற்கூறியவாறு எல்லாம் தன்னைக் கருதி நடக்கக்கூடாது. மாறாக, தொழிற்சங்கம் முதல் கட்சியின் நாடாளுமன்ற குழு வரை உள்ள மற்ற எல்லாப் பாட்டாளி வர்க்க அமைப்புகள் அனைத்தையும் வழி நடத்திச் செல்வதை தன்னுடைய பணியாகக் கொண்ட பாட்டாளி வர்க்க அமைப்பின் மிக உயர்ந்த வடிவமாகத் தன்னைக் கருதி நடக்க வேண்டும்.

2. புரட்சிகர நடைமுறையோடு பிரிக்கப்பட முடியாத வகையில் பிணைந்திருக்கிற புரட்சிகர மார்க்சிய கோட்பாட்டை, கட்சி அதுவும் குறிப்பாக கட்சியை வழிநடத்திச் செல்லும் சக்திகள் ஐயம் திரிபறக் கற்றுத் தெளிய வேண்டும்.

3. வரலாற்று ஒப்புவமைகளின் அடிப்படையிலோ, தயாராக வைக்கப்பட்டுள்ள சூத்திரங்களிலிருந்தோ கட்சி தன்னுடைய முழக்கங்களையும் வழிகாட்டல்களையும் வகுக்கக் கூடாது. மாறாக, புரட்சிகர இயக்கத்தின் பருண்மையான உள்நாட்டு, அனைத்து நாட்டு நிலைமைகளை மிகக் கவனமாக ஆய்ந்தறிவதால் கிடைக்கும் முடிவுகளில் இருந்தே வகுக்க வேண்டும். அது மட்டுமின்றி, அனைத்து நாட்டுப் புரட்சிகர அனுபவங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

4. மக்களின் புரட்சிகரப் போராட்டம் என்னும் உலைக் களத்தில் இந்த முழக்கங்கள், வழிகாட்டுதல்கள் எவ்வளவு தூரம் சரியானவை என கட்சி சோதித்தறிய வேண்டும்.

5. கட்சியின் வேலை முழுமையும் - குறிப்பாக சமூக ஜனநாயக பாரம்பரியம் இதுவரை கட்சியில் களைந்தெறியப்படாது இருக்குமேயானால் - கட்சியின் ஒவ்வொரு முயற்சியும், ஒவ்வொரு நடவடிக்கையும் இயல்பாகவே மக்களை புரட்சிகரமாக்கவும், புரட்சிகர உணர்வில் உழைக்கும் வர்க்கத்தின் பரந்துபட்ட மக்களைப் பயிற்றுவிக்கவும் அவர்களுக்குக் கற்பிக்கவும் ஆன புதிய, புரட்சிகர திசைவழியில் மறு ஒழுங்கமைப்பு செய்யப்பட வேண்டும்.

6. கட்சி தன்னுடைய வேலையில், அடிப்படைக் கொள்கைகளை சற்றும் பிறழாது உறுதியாகப் பற்றி நிற்பதை (குறுங்குழுவாதத்துடன் போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது) பரந்துபட்ட மக்களுடன் அதிகபட்ச தொடர்பும் பிணைப்பும் கொண்டிருப்பதோடு (க்வோஸ்டிசத்தோடு (Khvostism) போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது) ஒன்றிணைக்க வேண்டும். இது இல்லாமல் போகுமேயானால் கட்சி மக்களுக்கு கற்பிக்க இயலாமல் போவதோடன்றி மக்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் இயலாமல் போய்விடும்; மக்களை வழிநடத்திச் செல்லவோ தன்னுடைய மட்டத்திற்கு அவர்களை உயர்த்தவோ இயலாது போவதோடன்றி, அவர்களுடைய குரலுக்கு செவிசாய்க்கவோ அவர்களுடைய அவசரத் தேவைகளை எதிர்நோக்கவோ கூட இயலாததாகி விடும்.

7. கட்சி தன்னுடைய வேலையில், ஒரு சமரசமற்ற புரட்சிகர உணர்வை (புரட்சிகர சாகசத்தோடு போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது) முடிந்த அளவு நெகிழ்ச்சியோடும் சாமர்த்தியத் திறனோடும் (சந்தர்ப்பவாதத்தோடு போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது) இணைக்கத்தக்கதாக இருக்க வேண்டும். இல்லாமற் போனால், கட்சி, போராட்டம் மற்றும் அமைப்புகளின் எல்லா வடிவங்களையும் கற்று நிபுணத்துவம் பெற முடியாமல் போய்விடும். பாட்டாளி வர்க்கத்தின் அன்றாட நலன்களை பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அடிப்படை நலன்களோடு பிணைக்கவும் சட்டபூர்வ பணிகளை சட்டவிரோதப் போராட்டங்களோடு இணைக்கவும் இயலாததாகி விடும்.

8. கட்சி தனது தவறுகளை மூடிமறைக்கவோ, அல்லது விமர்சனங்களைக் கண்டு அஞ்சவோ கூடாது. அது தன்னுடைய சொந்தத் தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு தன்னை மேம்படுத்திக் கொள்வதோடு, ஊழியர்களுக்குக் கற்பிக்கவும் வேண்டும்.



9. கட்சி, லெனினியத்தின் போர்த்தந்திரத்தையும், செயல்தந்திரத்தையும் பிரயோகிக்கும் திறம் படைத்தவராகவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உண்மையான தலைவர்களாகத் தகுந்த போதுமான அனுபவம் பெற்றவராகவும், புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் விழைவுகளை நாணயமாக ஒலிப்போராய் முன்னிற்கத் தங்களைத் தகுந்த அளவுக்கு அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட முன்னணி போராளிகளிடமிருந்து மிகச் சிறந்தவர்களை தன்னுடைய முக்கிய வழிகாட்டும் குழுவில் சேர்த்துக் கொள்ள இயலும் தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

10. கட்சி உறுதிமிக்க ஒருமைப்பாட்டை அடையும் பொருட்டு தன்னிடமிருந்து ஊழல்படுத்தும் சந்தர்ப்பவாதிகளை உதறியெறிந்து, தன்னுடைய அமைப்புகளின் சமூகச் சேர்மானங்களை முறையாக செழுமைப்படுத்த வேண்டும்.

11. கட்சி, சித்தாந்த ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டும், இயக்கத்தின் நோக்கங்கள் பற்றிய தெளிவைக் கொண்டும், நடைமுறை நடவடிக்கைகளில் ஐக்கியத்தைக் கொண்டும், கட்சியின் பணிகளைப் பற்றி கட்சி உறுப்பினர் திரளினரிடையே புரிதலை ஏற்படுத்தியும் பாட்டாளி வர்க்க இரும்புக் கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும்.

12. கட்சி, தன்னுடைய முடிவுகளும் வழிகாட்டுதல்களும் நிறைவேற்றப்படுகின்றனவா என்று முறையாக சோதித்தறிய வேண்டும். இல்லாவிடில், இந்த முடிவுகளும் வழிகாட்டுதல்களும் வெற்று வாக்குறுதிகளாக போய்விடும் அபாயம் இருக்கிறது. இந்த அபாயம் கட்சி மீது பரந்துபட்ட பாட்டாளி மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்து விடும்.

இவையின்றி, போல்ஷ்வியமாதல் என்பது வெற்றுக் கூச்சலாகி விடும்.

*1925-ல் ஜெர்மன் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர் ஹெர்ஜாக் (Herzog) அவர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து ஒரு பகுதி. (ஸ்டாலின் நூல் தொகுதி 7, பக்கங்கள் 35 - 40)*



படிப்பகம்

www.padippakam.com

# கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராவது எப்படி?



# கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராவது எப்படி?

சென் யுன்

I கட்சி உறுப்பினருக்கான தகுதிகள்:-

சீனப் பொதுவுடைமைக் கட்சி சீனப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகும். இவ்வாறு முன்னணிப் படையாக நீடிப்பதற்கு கட்சியானது தனது உறுப்பினர்களின் தூய்மையைப் பேண வேண்டும். இதன் காரணமாகவே கட்சியானது உறுப்பினர்களின் தகுதி பற்றிய பிரச்சினையில் எப்போதுமே கவனம் செலுத்தி வந்துள்ளது. கட்சிக்குப் புதிய உறுப்பினர்களை வென்றெடுப்பது ஒவ்வொரு உறுப்பினருக்குமான கடமையும் தொடர்ச்சியான பணியுமாகும். எனவே, கட்சி உறுப்பினருக்கான தகுதி பற்றி எல்லோரும் தெளிவான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

## 1. *பொதுவுடைமைக் கட்சியில் யார் சேரலாம்?*

கட்சி உறுப்பினருக்கான தகுதி பற்றி கட்சி அமைப்பு விதிகளின் இரண்டாவது பத்தி கூறுவதாவது:

> கொமின்டெர்ன் மற்றும் சீனப் பொதுவுடைமைக் கட்சி ஆகியவற்றின் திட்டத்தையும் அமைப்பு விதிகளையும் ஏற்று, கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் இணைந்து தீவிரமாகச் செயல்பட்டு, கொமின்டெர்ன் மற்றும் கட்சியின் அனைத்து தீர்மானங்களின்படியும் நடந்து, கட்சி உறுப்பினர் தொகையை முறையாக செலுத்துபவர் எவரும் கட்சி உறுப்பினராகலாம்.

---

1939, மே 30-ஆம் தேதி எழுதப்பட்ட இக்கட்டுரை முதலில் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மையக் குழுவின் இதழான 'விடுதலை' (Liberation) எண் 72-இல் வெளிவந்தது. பின்னர் இக்கட்டுரை 1943-இல் விடுதலை அச்சகத்தாரால் வெளியிடப்பட்ட 'சீர்செய் இயக்க ஆவணங்கள்' எனும் நூலில் சேர்க்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கட்சியின் இயல்பும் கட்சி விரும்புகிற உறுப்பினர்களின் வர்க்க மூலமும் உறுப்பினருக்கான தகுதிகளைத் தீர்மானிக்கின்றன. இத்தகுதிகளும் கட்சி உறுப்பினர்களுக்கென திட்டமிடப்படும் பாத்திரமும் கட்சி கட்டுவதில் அதிமுக்கியத்துவம் உடையனவாகும். குறிப்பாக இந்தப் பிரச்சினைதான் 1903-இல் நடந்த ரசிய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேராயத்தில்[3] உக்கிரமான விவாதத்தையும் பாரதூரமான கருத்து வேறுபாடுகளையும் தோற்றுவித்தது. இதுவே மென்ஷ்விக்குகளுக்கும் லெனினுக்குமிடையிலான சர்ச்சையின் அடிப்படையான விசயமாயிற்று.

கட்சியின் திட்டத்தை ஏற்று, நிதிவகையில் அதற்கு உதவியளித்து, கட்சி அமைப்புகளில் ஏதாவது ஒன்றில் இருந்து வேலை செய்வோர் மட்டுமே கட்சியில் உறுப்பினராகலாம் என்று லெனின் உறுதியாக உரைத்தார். ஆனால் மென்ஷ்விக் மார்டோவ்வோ,[4] ரசிய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் உறுப்பினராக ஒருவர், அதன் திட்டத்தை ஏற்று, நிதிவகையில் உதவி செய்து, கட்சி அமைப்பு ஒன்றின் தலைமையின் கீழ் முறையாக உதவி வந்தால் போதுமென்றார்.

லெனினுடைய கண்ணோட்டத்தின்படி, கட்சி அமைப்பில் நடைமுறையில் சேர்ந்து, அதற்கு எவ்வித தயக்கமுமின்றி பணிந்து நடந்து, கட்சியின் இலட்சியத்திற்கு - பொதுவுடைமைக்கு - தங்களிடமுள்ள அனைத்தையும் தர முன்வருவோர் மட்டுமே கட்சி உறுப்பினர்களாகலாம். கட்சியில் சேராமல், இன்னும் சொல்லப் போனால், கட்சியில் சேரும் எண்ணம் கூட இல்லாமல், கட்சிக்கு உதவி செய்து ஆதரவாளராக இருந்தாலே போதும், அவர்கள் எல்லோரும் கட்சி உறுப்பினர்களாகலாம் என்ற மார்டோவ்வின் முன்மொழிதலை உறுதியுடன் எதிர்த்து நின்று, கட்சி அமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளை நிலைநாட்ட லெனின் போராடினார். மார்ட்டோவ்வின் முற்றிலும் சந்தர்ப்பவாதமான இந்தக் கண்ணோட்டம் கட்சிக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டை மறைத்து ஒதுக்குவதோடு கட்சியின் சாராம்சமான தன்மையை மழுங்கடித்து, அதை ஒரு தொழிற்சங்கம் அல்லது



மாணவர் சங்கத்தின் அளவுக்கு கீழிறக்கி, ஆதரவாளர்களின் பெருங்கடலில் மூழ்கடித்து, "குழப்பம், ஊசலாட்டம், சந்தர்ப்பவாதம் ஆகியவற்றின் அனைத்து அம்சங்களுக்கும் கதவைத் திறந்து விடுகிறது."[5] எனவே, கட்சி உறுப்பினர் தகுதிக்கு குறைந்தபட்சத் தேவையே, கட்சியின் உறுப்பு - அமைப்பு ஒன்றில் சேர்வதும் அதில் ஊக்கத்துடன் உழைப்பதுமாகும்.

லெனினது கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்த போல்ஷ்விக்குகள், தங்களது சொந்த போர்க்குணமிக்கக் கட்சியை, முற்று முழுவதும் மார்க்சியத் தன்மை கொண்ட, சித்தாந்த ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் ஐக்கியப்பட்ட ஒரு கட்சியை நிறுவினார்கள். இந்த உண்மை சர்வதேசிய ரீதியில் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உலகெங்கிலும் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டுவதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை இது வழங்கியது. கடந்த 18 ஆண்டுகால போராட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியானது ஒரு வலிமைமிக்க, வீரஞ்செறிந்த கட்சியாக ஆகியுள்ளது. ஏனென்றால், அது தொடங்கிய பொழுதே, அதன் முதல் தேசியப் பேராயத்திலேயே, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியானது லி ஹன்ஜன் - இன்[6] சட்டவாதத்தை எதிர்த்துப் போராடி, லெனினியக் கோட்பாட்டின்படி கட்சியைக் கட்டுவதற்கான அடித்தளத்தை அமைத்தது.

இப்போது நாம் கட்சியைப் பெருமளவில் விரிவாக்கிக் கொண்டிருக்கும் போது, கட்சி உறுப்பினர் பற்றிய லெனினியக் கோட்பாடு இன்னும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. அனுமதியின்றி கட்சி அமைப்புகளிலிருந்தோ, அல்லது கட்சித் தகுதியிலிருந்தோ விலகும் சில தனிநபர்களின் போக்கை சரிசெய்ய வேண்டும்.

*(2.) உறுப்பினருக்கு விண்ணப்பிக்கிற ஒவ்வொருவரும் கட்சித் திட்டத்தை ஏற்க வேண்டும். எனினும், அவர் திட்டத்தைப் பற்றி முற்று முழுப் புரிதலைக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.*

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தனக்கான ஒரு முழுமையான,[7] எழுதப்பட்ட திட்டத்தைக் கொண்டிராதபோதும், அது உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் திட்டத்தைப் (கொமின்டெர்னின்



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்தை[8]) பகிர்ந்து கொள்கிறது. மேலும் அது தனக்கென ஒரு குறைந்தபட்ச திட்டத்தையும் (அதன் பல்வேறு பேராயங்களின் முடிவுகள், மற்றும் ஜப்பானிய எதிர்ப்பு - தேசப் பாதுகாப்புக்கான 10 அம்ச திட்டம்[9]) கொண்டிருக்கிறது. கட்சித் திட்டத்தை ஏற்பது கட்சியில் சேருவதற்கு முன்நிபந்தனையாகும். ஆயினும் கட்சி உறுப்பினராக விண்ணப்பிக்கின்ற ஒவ்வொருவரும் கட்சித் திட்டத்தைப் பற்றிய நுட்பமான அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இதற்குப் பொருளில்லை. ஏனெனில், கோட்பாடுகளில் தேர்ச்சியுள்ளோருக்கு மட்டுமே இது சாத்தியம். விண்ணப்பிக்கிற ஒவ்வொருவரும் குறிப்பாக, விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சியில் சேருவதற்கு முன்பே கட்சித் திட்டத்தைப் பற்றியும் அமைப்பு விதிகள் பற்றியும் தேர்ந்த அறிவுடையோராக இருக்க வேண்டும் என்று நாம் கோரினால், நாம் மிகச் சிறந்த புரட்சியாளர்களை விலக்குவதோடு கட்சி தனது உறுப்பினர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற பொறுப்பையும் மறுப்பதாகும்.

### (3) கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஜப்பானுக்கு எதிரான போரில் ஊக்கமாகப் பங்கேற்பதோடு மட்டுமின்றி, கம்யூனிசத் திற்காகவும் கடுமையாக உழைக்க வேண்டும்.

ஜப்பானுக்கு எதிரான போரில் ஊக்கமாகப் பங்கேற்கும் ஒவ்வொருவரும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகிவிட முடியாது. உறுப்பினராக விண்ணப்பிப்பவர் கட்சித் திட்டத்தை ஏற்பதோடு பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒட்டுமொத்த மனித குலத்தையே உய்விக்கும் கம்யூனிச இலட்சியத்திற்குத் தங்களை அர்ப்பணிக்க விருப்பமுடையவராகவும் இருக்க வேண்டும். எனவே கட்சியில் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க, கம்யூனிசத்தைப் பற்றியும் கட்சித் திட்டத்தைப் பற்றியும் பரந்துபட்ட மக்களிடம் நாம் திட்டமிட்ட முறையான கற்பித்தலைச் செய்ய வேண்டும். தேசிய மற்றும் வர்க்கப் போராட்டத்தினூடே அவர்களை நாம் நெருக்கமாகக் கண்காணித்து அவர்களிலிருந்து மிக முன்னேறிய தனிநபர்களை கட்சிக்குத் தேர்வு செய்ய வேண்டும்.

## II கட்சி உறுப்பினர் கட்டமைப்பு

பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் விழிப்புணர்வு பெற்ற, முன்னேறிய நபர்களைக் கொண்டது. ஆனால் அவ்வாறு அது பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக நீடிப்பதற்கு தொடர்ந்தும் முறையாகவும் தனது உறுப்பினர் கட்டமைப்பை சரி செய்து கொள்ள வேண்டும்.

### (1.) நாம் உழைக்கும் வர்க்க நபர்களின் விகிதத்தை அதிகரிக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகும். கட்சியானது, உழைக்கும் வர்க்கத்தின் மிகச் சிறந்த நபர்களைத் தன்னகத்தே உள்வாங்கிக் கொள்ள வேண்டுமென்றார் ஸ்டாலின்.[10] எனவே, கட்சியானது தனது பாட்டாளி வர்க்க உட்கருவை முறையாக வலுப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

இன்றைய கட்டத்தில், நமது கட்சியில் உழைக்கும் வர்க்கத்தினரின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வது குறிப்பான முக்கியத்துவமுடையதாகும். இப்பொழுதுவரை, கட்சியானது நகர்ப்புற தொழிலாளர் இயக்கத்தில் சாரமுள்ள வேலையைச் செய்யவில்லை. இதற்கு முன் சீனத் தொழிலாளர்கள் இவ்வளவு துயறுற்றதில்லை. ஜப்பானிய ஆக்கிரமிப்பற்கு எதிரானப் போர் தொடங்கியதிலிருந்து பல பெரும் தொழில் நகரங்கள் எதிரியின் கைகளில் வீழ்ந்ததால் தொழிலாளர்கள் போரின் சூறையாடலுக்கு நேரடியாக ஆளாயினர். அவர்களில் பெரும்பகுதியினர் வேலையின்றி உள்ளனர்; பரவலாக கிராமப்புறங்களில் சிதறியுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் கட்சி தனது முயற்சிகளை இரட்டிப்பாக்கி அவர்களை கட்சியில் சேர்க்க வேண்டும். நகர்ப்புற கட்சி அமைப்புகள் நகரங்களில் எஞ்சியிருக்கிற தொழிலாளர்கள் மீது கவனத்தைக் குவிக்க வேண்டும். கிராமப்புறங்களில் இருக்கின்ற கட்சி அமைப்புகள் நகர்ப்புறங்களிலிருந்து கிராமப்புறங்களுக்கு ஓடிவந்த தொழிலாளர்கள் மீதும், விவசாயக் கூலித் தொழிலாளர் மற்றும் கைவினைஞர்கள் மீதும் கவனத்தைக் குவிக்க வேண்டும். நம்முடைய இலக்கு கட்சியின் பாட்டாளி வர்க்க அடித்தளத்தை விரிவடையச் செய்து ஜப்பானிய எதிர்ப்புப் போரில் தொழிலாளர்கள் தங்களது மையமான பாத்திரத்தை ஆற்ற வைத்தல், விவசாயிகள் மற்றும்





படிப்பகம்

www.padippakam.com

நகர்ப்புற குட்டி முதலாளிகள் மீதான தமது தலைமையை உறுதி செய்து கொள்ள வைத்தல் ஆகியனவாகும்.

எனினும், கம்யூனிஸ்ட் கட்சி ஒரு "தொழிலாளர்கள் கட்சி" அல்ல. மாறாக, பாட்டாளி வர்க்கத்தின் அமைப்பாக்கப்பட்ட முன்னணிப்படை, அதன் வர்க்க அமைப்பின் உச்சமட்ட வடிவம் என்பதை வலியுறுத்திக் குறிப்பிட வேண்டும். எனவே, எல்லாத் தொழிலாளர்களும் கட்சியில் சேர முடியாது. மாறாக, மிகுந்த அரசியல் உணர்வுடையோரும், ஊக்கத்துடன் செயல்படுவோரும், தொழிலாளர் வர்க்க இலட்சியத்திற்கு அர்ப்பணித்துக் கொள்வோருமே கட்சியில் உறுப்பினராகலாம்.

**(2.) ஏழை விவசாயிகள், அறிவுத்துறையினர் மீது கட்சி கவனம் செலுத்த வேண்டும்.**

சீனா ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடல்ல. மாறாக, பின்தங்கிய அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ நாடு. இத்தகைய நாட்டில் வறுமையுற்ற, புரட்சிகரமான விவசாயிகள் பெருந்திரளாக இருக்கின்றனர். அனைத்துவகையான ஒடுக்குமுறைகள், சுரண்டல்களுக்கும் அவர்கள் ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதால் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரிக்கத் தயாராக உள்ளனர். மேலும் அதன் தலைமையில் ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான ஒரு தீர்மானகரமான போராட்டத்தை நடத்தவும் தயாராக இருக்கிறார்கள். புரட்சியின் வரலாற்றில் இதுவரை விவசாயிகள் ஒரு மகத்தான பாத்திரத்தை ஆற்றியுள்ளார்கள் என்பது போதுமான அளவு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கத்திற்கு மிகவும் சக்திவாய்ந்த கூட்டாளியாக ஏழை விவசாயிகள் நீடிப்பார்கள் என்பதைப் பற்றி எவ்வித ஐயமுமில்லை. எனவே, பெரும் எண்ணிக்கையில் விவசாய செயல்வீரர்களைக் கட்சிக்குள் கொண்டு வந்து, அதன் மூலம் கிராமப்புற பாட்டாளிகளையும், ஏழை விவசாயிகளையும் கிராமப்புறத்தில் நமது சமூக அடித்தளமாக ஆக்குவது முழுமுற்றான முக்கியத்துவம் உடையதாகும்.

இதேபோல், அரைக்காலனிய, அரைநிலப்பிரபுத்துவ சீனத்தின் புரட்சிகர இயக்கத்தில் குட்டி முதலாளித்துவ அறிவுத்துறையினரும் ஒரு முக்கியமான பாத்திரத்தை ஆற்றலாம். கடந்தகால புரட்சிகர இயக்கங்களிலும் குறிப்பாக, இப்போது நடக்கின்ற ஜப்பானிய எதிர்ப்புப் போரிலும் அறிவுத்துறையினரில் பலர் ஒரு சரியான இலட்சியத்திற்காக வீரதீரத்துடன் போரிடக்கூடியவர்கள் என்று நிருபணமாகியுள்ளது. அவர்களது கல்வியறிவு மற்றும் அரசியல் உணர்வு காரணமாக கட்சிக்கும் மக்கள் திரளுக்கும் இடையில் அவர்கள் ஒரு இணைப்புப் பாலமாகச் சேவை செய்துள்ளார்கள். கம்யூனிசத்திற்கும் பாட்டாளி வர்க்க இலட்சியத்திற்கும் அர்ப்பணிக்கத் தயாராகவுள்ள சாத்தியமான அத்தனை புரட்சிகர அறிவுத்துறையினரையும் நாம் கட்சிக்குள் கொண்டுவர வேண்டும். அதேவேளையில், நாம் குறிப்பாக வறிய நிலையில் உள்ள புரட்சிகர அறிவுத்துறையினரைக் கட்சியில் சேர்க்க வேண்டும் என்று அனுபவங்கள் புகட்டுகின்றன. ஏனென்றால், அவர்கள் பொதுவான அறிவுத்துறையினரிடமிருந்து வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களது வறிய வாழ்க்கை நிலைமைகள் அவர்களைக் கட்சியை நோக்கிச் செலுத்துகின்றன. மேலும் அவர்கள் சமுதாயத்தின் தாழ்ந்த படிக்கு அருகில் இருப்பதால் அவர்களுடைய சிந்தனையும் வாழ்க்கை நிலையும் அவர்களை உழைக்கும் மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வருகின்றன. இதனால், அறிவுத்துறையினரிடமிருந்து கட்சிக்கு கொண்டு வருவதற்கு அவர்கள் பொருத்தமான பிரிவினராக இருக்கின்றனர்.

**(3.) பெண் தொழிலாளர்கள், குட்டி முதலாளித்துவ ஏழை - புரட்சிகரப் பெண்கள் அதாவது, விவசாயப் பெண்கள் மற்றும் பெண் அறிவுத்துறையினர் மீது கட்சி குறிப்பான கவனம் செலுத்த வேண்டும்.**

பெண்கள் சீனத்தின் மக்கட்தொகையில் சரிபாதியினராக இருக்கிறார்கள். அவர்களின் பங்கேற்பின்றி, புரட்சி வெற்றி பெற முடியாது. கட்சியில் மிகச் சில பெண்களே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களைக் கட்சியில் சேர்ப்பதற்குப் போதிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. சீனத்தில் ஆண்களும் பெண்களும் பாரம்பரிய வழக்கப்படி அதிக சமூகத் தொடர்பு கொண்டவர்களாக இல்லாதிருக்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி பெண்க





படிப்பகம்

www.padippakam.com

ளைக் கட்சியில் சேர்க்கும் தங்கள் கடமையை சில கட்சி உறுப்பினர்கள் அலட்சியப்படுத்துகிறார்கள். நாம் இந்த சாக்குப் போக்கை பகிரங்கமாகக் கண்டிக்க வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லா உறுப்பினர்களும் குறிப்பாக பெண் உறுப்பினர்கள், பெண்களைக் கட்சியில் சேர்ப்பதைத் தங்களின் மிகமிக முக்கியமான பணிகளில் ஒன்றாகக் கருத வேண்டும். தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், அறிவுத்துறையினர் மத்தியிலிருந்து புரட்சிகர பெண்களை பெருமளவில் கட்சியின் அணிகளாகக் கொண்டுவரும் அவசியத்தை கட்சி வலியுறுத்த வேண்டும். பெண்களைக் கட்சியில் சேர்ப்பதைக் கட்சியின் அன்றாட வேலையாக்க வேண்டும். பயிற்சி மற்றும் வேலைகள் மூலம் அவர்களின் அரசியல் உணர்வையும் கல்வித்தரத்தையும் உயர்த்த வேண்டும்.

### 4. பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியமான கம்யூனிசத்திற்கு எல்லாக் கட்சி உறுப்பினர்களும் போராட வேண்டும்.

தொழிலாளர்கள் கட்சியின் அடித்தளமாவர். எனவே, அவர்களது உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு கட்சி குறிப்பான கவனத்தைச் செலுத்த வேண்டும். பிற வர்க்கத்திலிருந்து வந்து புரட்சிகர இயக்கத்தின் அன்றாடப் போராட்டங்களில் புடம் போடப்பட்டவர்களை கட்சி நிராகரிக்கக் கூடாது. ஆனால் இப்படிப்பட்ட நபர்கள் கட்சியில் அனுமதிக்கப்படும் முன்பு அவர்கள் தங்களது முந்தைய பாட்டாளி வர்க்கமற்ற, கம்யூனிசமற்ற நிலைப்பாடுகளைக் கைவிட்டுவிட்டு கட்சியின் திட்டத்தையும் அமைப்பு விதிகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கட்சியின் அமைப்பு சேர்மானத்தின் தூய்மையைப் பாதுகாத்தல், அதன் பாட்டாளி வர்க்க உட்கருவை வலுப்படுத்துதல், கம்யூனிசத்தை அதன் அடிப்படை இலட்சியமாகக் கொள்ளுதல் ஆகியவற்றை மறுக்கும் எந்தக் கண்ணோட்டத்தையும் கட்சி அடியோடு நிராகரிக்கிறது. சுருங்கச் சொன்னால் கட்சியை அனைத்து வர்க்கங்களுக்கான ஒரு 'தேசிய புரட்சிகர கூட்டணியாக' மாற்றும் எந்தக் கருத்தையும் கட்சி நிராகரிக்கிறது. பாட்டாளி வர்க்க இலட்சியமான கம்யூனிசத்திற்காக வாழ்நாள் முழுவதுமான ஒரு போராட்டத்தை நடத்த எல்லாக் கட்சி உறுப்பினர்களும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.



## III கட்சி உறுப்பினர் சேர்க்கை, மறு சேர்க்கை, மறு நியமனத்திற்கான வழிமுறைகள் பற்றி:-

### 1. கட்சியில் உறுப்பினராவதற்கான வழிமுறைகள்:-

கட்சி அமைப்பு விதிகள் மற்றும் நடைமுறை விதிகளின்படி கட்சி உறுப்பினருக்கான ஒரு விண்ணப்பதாரரை ஒரு உறுப்பினரோ அல்லது உறுப்பினர்களோ பரிந்துரை செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் கூலி விவசாயத் தொழிலாளியாகவோ, தொழிலாளியாகவோ இருந்தால் ஒரு உறுப்பினரும், குட்டி முதலாளியாக இருந்தால் இரண்டு உறுப்பினர்களும், பிற கட்சிகளிலிருந்து வருவோராக இருந்தால் மூன்று உறுப்பினர்களும் பரிந்துரை செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் ஒரு கட்சிக் குழு மற்றும் ஒரு கிளையால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதன் உடனடி உயர்மட்ட குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும். பிற அரசியல் குழுக்களிலிருந்து வருவோரை கட்சியின் மாவட்டக் குழு, மையக் குழுவின் துணைக்குழு அல்லது மையக்குழு அங்கீகரிக்க வேண்டும்.

### 2. கட்சி உறுப்பினர்களின் மறுசேர்ப்பு மற்றும் மறுநியமனம் பற்றிய விதிமுறைகள்:

மையக்குழுவின் முடிவுப்படியும் குறிப்பான பிரச்சினையில் உள்ள தகுதிகளின்படியும் கட்சி உறுப்பினர்களின் மறுசேர்க்கை மற்றும் மறுநியமனம் கையாளப்பட வேண்டும். இது குறித்து நான்கு நெறிமுறைகள் உள்ளன.

(i) கட்சியிலிருந்து நீண்டகாலம் தொடர்பில்லாமல் இருந்த போதிலும் கட்சிக்காக தொடர்ந்து வேலை செய்து கொண்டிருப்பவர்களை அவர்கள் முன்பு வகித்த தகுதி வரிசையைக் கணக்கில் கொண்டு மறுநியமனம் செய்யலாம். பிரிந்திருந்த காலத்தில் அவர்கள் செய்த வேலைகளுக்கு உரிய மதிப்பீடு கொடுத்து இதைச் செய்ய வேண்டும். ஆனால் தாங்கள் இவ்வாறு தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்ததை கட்சிக்கு எடுத்துச் சொல்ல சில கட்சி உறுப்பினர்களை அவர்கள் சாட்சியாகக் கொண்டுவர வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

(ii) அப்படி சாட்சியாக அழைத்து வர இயலாதிருப்பினும், அவர்கள் அன்றைய நிலையில் உறுப்பினருக்கான தகுதியுடையவர் களாக இருப்பின், அவர்களை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம். அதற்குப்பின், அவர்கள் எப்போது சாட்சியங்களை கொண்டு வருகிறார்களோ, அப்போது, பிரிந்திருந்த காலத்தில் அவர்கள் செய்த வேலைகளுக்கு மதிப்பீடு கொடுத்து பழைய தகுதி வரிசையை கணக்கில் கொண்டு மறுநியமனம் செய்யலாம்.

(iii) கட்சியில் நீண்டகாலம் பணிபுரிந்துவிட்டு, ஆனால் அதற்குப் பின் ஓரிரு ஆண்டுகள் பணி செய்யாமல் இருந்திருப்பவர் கள் - இந்த ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் புரட்சியின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்கும் நடவடிக்கைகளைச் செய்யாமல் இருந்திருக்க வேண்டும் - மீண்டும் கட்சியில் மறுநியமனம் செய்யப்படுவார்க ளாயின், அவர்கள் கட்சியிலிருந்து விலகியிருந்த காலம் அவர்களது தகுதி நிலையைத் தீர்மானிப்பதில் சேர்த்துக் கொள்ளப்பட மாட் டாது.

(iv) கட்சியிலிருந்து நீண்டகாலம் விலகியிருந்து, ஆனால் புரட்சியின் நலன்களுக்கு ஊறுவிளைவிக்கும் எவ்வித நடவடிக்கை யையும் செய்யாமலிருந்திருந்தால், ஒருவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கான தகுதி அவரிடம் இருக்க வேண்டும், அத்துடன் அவரை கணிசமான காலம் பரிசோதித்து விட்டு அதன் பின்னர்தான் சேர்க்க வேண்டும்.

கட்சியை மறுத்து கைகழுவிய முன்னாள் உறுப்பினர்களை மீண்டும் சேர்க்கக்கூடாது.

## IV தேர்வுநிலை உறுப்பினர்கள்[11]

### (1.) தேர்வுநிலைக் காலத்திற்கான ஒழுங்குமுறைகள்:-

தேர்வுநிலைக் காலம் புதிய கட்சி உறுப்பினரின் வர்க்கத் தகுதியால் தீர்மானிக்கப்படுகிறது. மையக்குழுவால் உத்தேசமாகத் தீர்மானிக்கப்பட்ட தேர்வுநிலைக் காலம் பின்வருமாறு: தொழிலா ளர்கள், பண்ணைக் கூலித் தொழிலாளர்களுக்கு எதுவுமில்லை; ஏழை விவசாயிகள், கைவினைஞர்களுக்கு ஒரு மாதம்; புரட்சிகர



மாணவர்கள், அறிவுத்துறையினர், அலுவலகத் தொழிலாளர்கள், நடுத்தர விவசாயிகள், புரட்சிகர படைவீரர்கள் ஆகியோருக்கு மூன்று மாதங்கள்; பிற வர்க்கத்திற்கு ஆறு மாதங்கள்; சிறப்பு நிலையின்கீழ் இது ஆறு மாதத்திற்கு மேலும் இருக்கலாம்.

### (2.) தேர்வுநிலைக் காலத்தின் நோக்கம், முன்மொழிவோரின் கடமைகள் மற்றும் முழு உறுப்பினராக மாற்றுவதற்கான வழிமுறைகளும் தகுதிகளும்:

பாட்டாளி வர்க்கத்திலிருந்து அல்லாது பிற வர்க்கங்களிலி ருந்து கட்சியில் சேர்வோர் குறிப்பிட்ட தேர்வுநிலைக் காலத்தை முடித்தாக வேண்டும். இந்தக் காலத்தை அவர்களைப் பயிற்றுவிக்க வும் கண்காணிக்கவும் பயன்படுத்த வேண்டும். பகுதி நிலைமைக ளுக்குப் பொருத்தி மார்க்சிய - லெனினியக்* கோட்பாட்டைப் பயிற்றுவிப்பதன் மூலமும் குறிப்பிட்ட வேலைகளைக் கொடுத்தும் கட்சியானது தேர்வுநிலை உறுப்பினர்களின் அரசியல் புரிதலை முறையான கட்சி உறுப்பினர்கள் மட்டத்திற்கு உயர்த்த பயிற்று விக்க வேண்டும். அதே வேளையில், தேர்வுநிலை உறுப்பினர்க ளின் தனிப்பட்ட பண்புகளைப் பரிசீலித்து, அரசியல் சித்தாந்தம், வேலையைப் பற்றிய அவர்களது கண்ணோட்டம், கட்சி மீதான அவர்களது பற்றுதல் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் உறுப்பினர்களாகத் தகுதி பெற்று விட்டார்களா? என்பதை வர லாற்று ரீதியிலும் அனைத்தும் தழுவிய நோக்கிலும் தீர்மானிக்க வேண்டும். முழு கட்சி உறுப்பினர்களாக மாற்றம் பெற இது ஒரு தயாரிப்புப் படியாகும்.

புதிய உறுப்பினர்கள் தங்களுக்கு அரசியல் ரீதியில் பொறுப் பேற்கும் பரிந்துரையாளர்களைக் கொண்டிருக்க வேண்டும். பரிந்து ரையாளர்கள் தாங்கள் பரிந்துரைக்கும் உறுப்பினர்கள் தொடர்பாக கட்சிக்கு மிகப்பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை அவர்கள் எளிதில் தள்ளிவிட முடியாது. அவர்கள் தாங்கள் பரிந்துரைத்த தேர்வுநிலை உறுப்பினர்களின் சொல்லையும் செய லையும் நெருக்கமாக கண்காணிப்பதோடு மட்டுமின்றி, அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

விசயங்களில் அவர்களுக்குப் பொறுமையாகவும் முறையாகவும் கல்வி அளிக்க வேண்டும்; வேலைகளில் உற்சாகத்துடன் உதவி செய்ய வேண்டும். அதேவேளையில், கட்சியும் பரிந்துரைத்தவர்களின் பொறுப்புணர்ச்சியையும் கட்சி இலட்சியத்தின் மீதான அவர்கள் பற்றுதலையும் பரிசோதிக்க முடியும்.

தேர்வுநிலைக் காலத்தில், தேர்வுநிலை உறுப்பினரை கல்வியளித்து, கண்காணித்த பின், முழு உறுப்பினராக மாற்றுவதற்கான தகுதியை அவர் அடைந்து விட்டாரா? என்பதை கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். அவரது எல்லா சொற்கள், செயல்கள் மூலம் வெளிப்படும் கட்சியைப் பற்றிய அவரது புரிதல், கம்யூனிச இலட்சியத்தின் மீதான அவரது நம்பிக்கை, அவரது அன்றாட வேலைகள், கட்சியிடம் அவர் காட்டும் அர்ப்பணிப்பு ஆகிவற்றையும் அவரைப் பற்றிய மதிப்பீட்டில் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர் தகுதியுடையவராக இருப்பின், முழு கட்சி உறுப்பினராக மாற்றுவதற்கான அவரது வேண்டுகோள் கட்சிக் குழுவாலும் கிளையாலும் ஏற்கப்படலாம். அடுத்த உயர்மட்ட கட்சிக்குழுவால் இது அங்கிகரிக்கப்பட வேண்டும். எங்கு சூழ்நிலைகள் அனுமதிக்கின்றனவோ, அங்கு கட்சியில் சேர்ப்பதை ஒரு விழாவாக கட்சிக் கமிட்டி நடத்தலாம்.

முழு உறுப்பினராவது தேர்வுநிலைக் காலத்தை பூர்த்தி செய்வதை சார்ந்ததல்ல. மாறாக, கட்சி பற்றிய தேர்வுநிலை உறுப்பினரின் புரிதலைச் சார்ந்ததாகும். தேர்வுநிலைக்காலம் முடிந்த பிறகு முழு உறுப்பினராக மாற்றம் பெறும் தகுதியை அவர் பெறாமல் இருந்தால், தேர்வுநிலைக் காலத்தை முதல் தடவை வழங்கிய காலத்தைப் போல அதே அளவு நீட்டிக்கலாம். அவசியம் இருந்தால், தேர்வுநிலை உறுப்பினர் தகுதியைக் கூட ரத்து செய்யலாம். எனினும், தேர்வுநிலைக் காலத்தை நீட்டிப்பதை சிறிய விசயமாக கருதக் கூடாது. எடுத்துக்காட்டாக, ஒரு சாதரண ஒழுங்கு நடவடிக்கை போல் பத்து நாட்கள், இருபது நாட்கள் என்று நீட்டிக்கக் கூடாது.



பதினாறு வயதுக்குட்பட்டவர்கள் கட்சி உறுப்பினராவதற்கு தகுதியற்றவர்கள் என்பது ஒரு விதியாகும். பதினாறு வயது மற்றும் அதற்கும் மேற்பட்டோர் தேர்வுநிலை உறுப்பினராக பரிந்துரை செய்யப்படலாம். ஆனால் அவர்கள் பதினெட்டு வயதை அடைந்த பின்பே அவர்கள் முழு உறுப்பினராகலாம். எனினும், பதினெட்டு வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்து ஏற்கனவே கட்சி உறுப்பினர்களாக ஆகி விட்டவர்கள் தங்களது உறுப்பினர் தகுதியைத் தக்க வைத்துக் கொள்ளலாம். அவர்களை வெளியேற்றவோ, தற்காலிகமாக நீக்கவோ கூடாது.

### (3.) தேர்வுநிலை உறுப்பினர்களின் உரிமைகளும் கடமைகளும்:-

தேர்வுநிலை உறுப்பினர்கள் கட்சி தரும் வேலையை நிறைவேற்ற வேண்டும்; கட்சி நிதியைச் செலுத்த வேண்டும்; கட்சி ஆவணங்களைப் படித்து கற்க வேண்டும்; அல்லது அரசியல், இராணுவப் பயிற்சி பெற வேண்டும். கட்சிக் கூட்டங்களில் பேச அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால் ஓட்டுப் போட முடியாது. ஒரு தேர்வுநிலை உறுப்பினர், வேறு தேர்வுநிலை உறுப்பினர்களை கட்சி உறுப்பினர்களாக முன்மொழியலாம். ஆனால் முறையான பரிந்துரை செய்யப்படுவதற்கு முன்பு கட்சிக் கிளை அவர்களை நேர்காணவும், பரிசோதிக்கவும் சிலரை அனுப்பும். கட்சியின் உள் வேலைகளில் தேர்வுநிலை உறுப்பினர்கள் குழுத் தலைவர்களாவோ அல்லது கட்சிக் கிளையின் நிர்வாகியில் ஒருவராகவோ பணியாற்றத் தகுதியற்றவர்கள். எனினும், தனிச்சிறப்பான சூழ்நிலைகளில் புதிய கட்சிக்கிளைகளில் அல்லது கிளைகளில் தேர்வுநிலை உறுப்பினர்கள் பெரும்பான்மையினராக இருந்தால், விதிவிலக்குகள் அளிக்கலாம்.

சில கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளவோ அல்லது இரகசிய கட்சி ஆவணங்களை படித்துப் பார்க்கவோ தேர்வுநிலை உறுப்பினர்களுக்கு உரிமையில்லை.

## V ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருக்குரிய தகுதிகள்

### (1.) அவர் கம்யூனிசத்திற்கான போராட்டத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சி மனித குலத்தின் முற்றான விடுதலைக்கும், கம்யூனிசத்திற்கும், பாட்டாளி வர்க்க இலட்சியத்திற்கும் போராடு



படிப்பகம்

www.padippakam.com

கிற ஓர் அரசியல் கட்சி. எனவே, கம்யூனிசத்திற்கு தன்னை அர்ப்பணிப்பு செய்ய விருப்பமுள்ள ஒரு கட்சி உறுப்பினர் பல்வேறு கட்டங்களில் கட்சியின் குறிப்பான கடமைகளை நிறைவேற்றப் பாடுபடுவதோடு ஒரு புரட்சிகர உலகப் பார்வையை உருவாக்கவும் வேண்டும். இதன் பொருள், கம்யூனிசத்தை அடைவதற்காக இறுதிவரை போராட அவர் உறுதி கொள்ள வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட பார்வையை ஒருவர் உருவாக்கிக் கொள்வது எப்படி? அதற்கு நேர்மையாக இருப்பது எப்படி? எல்லாவற்றிற்கும் முதலாவதாக, மனித சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சியைத் தீர்மானிக்கும் விதிகளை ஒருவர் புரிந்து கொண்டு, கம்யூனிச சமுதாயம் இறுதியாக அமைந்தே தீரும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அதாவது, ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தனது வர்க்க உணர்வை உயர்த்திக் கொள்வது, புரட்சியில் தன்னைப் புடமிட்டுக் கொள்வது, மார்க்சியத்தில் தேர்ந்த தெளிவு பெறுவது என்று இதைச் சொல்லலாம். இந்த வழியில், அவர் சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பூர்வமான இடத்தையும் பாத்திரத்தையும் பற்றிய தெளிவான புரிதலைப் பெறுவார். பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள், எல்லா மனித குலத்தையும் விடுவிக்கும் அதன் மாபெரும் பணி, கட்சி மற்றும் அதன் உறுப்பினர்களின் உடனடிப் பணிகள் மற்றும் இறுதிக் குறிக்கோள் ஆகியவைப் பற்றிய தெளிவான புரிதலைப் பெறுவார். இது ஒன்றுமட்டுமே அவர் ஓர் உறுதியான உலகப் பார்வையை வளர்த்துக் கொள்ளவும் அதற்கு வாழ்நாள் முழுவதும் உண்மையாக இருக்கவும் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு இறுதி வரை போராடவுமான ஒரே வழியாகும். அதேவேளையில், ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் சீனப் புரட்சியானது கடினமான போராட்டங்கள் கொண்ட ஒரு நீண்ட போக்கு என்பதையும் அதன் வளைந்து நெளிந்து செல்லும் ஆபத்துகள் அடங்கிய பாதையில் தொடர்ந்து செல்வதற்கு ஒரு புரட்சியாளன் பல வருடங்கள் இன்னல்களையும் பின்னடைவுகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். எதிரிக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டத்தில் நெருக்கடியான தருணங்களில் தனது உயிரையே கூட தியாகம் செய்யவும் அவர் தயாராக இருக்க வேண்டும். எனவே ஒவ்வொரு கட்சி உறுப்பின



ரும் கம்யூனிசத்தை அடைவதில் அசையாத நம்பிக்கை வைத்திருப்பது மட்டுமின்றி, பாட்டாளி வர்க்கத்தின், சீன மக்களின், சீன தேசத்தின் விடுதலைக்கு துன்பங்கள், தியாகங்களால் நிலைகுலையாது இறுதிவரை போராடவும் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**(2.) புரட்சியின் நலன்களை கட்சி உறுப்பினர் எல்லாவற்றிற்கும் மேலாக வைக்க வேண்டும்.**

நமது கட்சி சீனப் பாட்டாளி வர்க்கத்தின், ஒட்டுமொத்த சீன மக்களின், சீன தேசத்தின் முற்றான விடுதலைக்காகவும், கம்யூனிச சமுதாயத்தை நிறுவுவதற்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. எனவே, நமது தேசத்தின், மற்றும் மக்களின் நலன்களும் கட்சியின் நலன்களும் ஒன்றேயாகும். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கட்சியினுடைய தலைமையின் கீழ் கம்யூனிச இலட்சியத்திற்காகப் போராடும் போராளிகள் ஆவர். எனவே, கட்சி உறுப்பினர்களின் நலன்கள் தேசத்தின், மக்களின், கட்சியின் நலன்களே. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் தனது சொந்த நலன்களைப் புரட்சியின், கட்சியின், பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு உட்படுத்தி எவ்விதமான தயக்கங்களும் இன்றி கட்சிக்கும், புரட்சிக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

எனினும், புரட்சிக்கும் கட்சிக்கும் பாடுபடுகிற போது ஒரு கட்சி உறுப்பினரின் சொந்த நலன்கள் சில சமயங்களில் கட்சியின் நலன்களோடு முரண்பட நேரிடலாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் கட்சியின், புரட்சியின் நலன்களுக்காக தனது சொந்த நலன்களைத் தயக்கமின்றி தியாகம் செய்ய வேண்டும். கட்சி மற்றும் புரட்சியின் நலன்களே மேலதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்ற நெறியின்படி தனது எல்லா சொந்தப் பிரச்சினைகளையும் அணுகி, கட்சி மற்றும் புரட்சியின் நலன்களை முதன்மைப்படுத்த வேண்டும்.

"எல்லாவற்றிற்கும் மேலானது கட்சி மற்றும் புரட்சியின் நலன்களே" என்பது வெறும் வெற்று முழக்கமல்ல. இந்த முழக்கத்தின் பொருளை கட்சி உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவது மட்டுமல்ல, தங்களது அன்றாட



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கையில் சந்திக்கிற ஒவ்வொரு பிரச்சினைக்கும் இதைத் தயக்கமின்றி பிரயோகிக்க வேண்டுமென்றும் கட்சி வலியுறுத்துகிறது. கட்சி உறுப்பினர்கள் புரட்சி மற்றும் கட்சியின் நலன்களுக்காக எதையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கும்போதுதான் புரட்சியின் வெற்றி நிச்சயம் என்று கட்சி நம்பிக்கை கொள்ள முடியும்.

### 3. உறுப்பினர் கட்சியின் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்; இரகசியங்களைக் காக்க வேண்டும்.

கட்சியின் வழியை செயல்படுத்த கட்டுப்பாடே உத்திரவாதமளிக்கிறது என்பதைக் கட்சியின் பதினெட்டு ஆண்டு கால அனுபவங்கள் நிரூபித்துள்ளன. கடந்த காலத்தில் நாம், கட்சிக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தியதாலும், உட்கட்சிப் போராட்டத்தை திறம்பட நடத்தியதாலும்தான் சென் டு சியு[12]-யாலும் பிறராலும் முன்வைக்கப்பட்ட தவறான வழிகளையும் புரட்சியை சிறுமைப்படுத்த முயன்ற சாங்கோ தா[13]-வின் திட்டங்களையும் முறியடிக்க முடிந்தது. இவ்வாறுதான் பல்வேறு கட்டங்களில் நமது புரட்சிகரப் பணிகளை நிறைவேற்றுவதை உறுதி செய்ய முடிந்தது. இன்று ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான போரைத் தொடர்ந்து நடத்த முடிவதும் ஜப்பானிய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டியதும் இதனால்தான். கட்சி தனது மொத்த உறுப்பினர்களையும் ஐக்கியப்படுத்தவும், புதிய இடர்ப்பாடுகளைக் கடந்து செல்லவும், புதிய வெற்றிகளைப் பெறவும் கட்சியானது கட்டுப்பாட்டை கட்டிக் காக்க வேண்டும். எனவே, கட்சிக் கட்டுப்பாட்டை உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிப்பது ஒவ்வொரு உறுப்பினரது கடமையாகும். கட்சிக் கட்டுப்பாட்டை சீர்குலைக்கிற எல்லாப் போக்குகளையும் கட்சி உறுப்பினர் முறியடிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, கட்டுப்பாட்டை சீர்குலைக்கும் எந்தவொரு சொல்லுக்கும் அல்லது செயலுக்கும் தன்னை விமர்சனம் செய்து கொண்டு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும். கட்சியின் வழிக்கு உங்கள் ஆதரவைத் தெரிவிப்பது, அதற்கு ஆதரவாகக் கட்சிக் கூட்டங்களில் வாக்களிப்பது அல்லது மக்களின் மத்தியில் ஆதரிப்பது மட்டும் கட்சிக் கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பது எனக் கருதிவிட வேண்டாம். கட்சிக் கட்டுப்பாடு அதையும் விட அதிகமான பொருளுடையது.



யார் ஒருவர் தனது ஒவ்வொரு செயலிலும் தனது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு குறிப்பிட்ட பிரச்சினையிலும் இரும்பு போன்ற கட்டுப்பாட்டை விருப்பப் பூர்வமாக முன்வந்து கடைப்பிடிக்கிறாரோ அவரே ஒரு சிறந்த கட்சி உறுப்பினராவார். அதன் மூலம் அவர் முன்மாதிரியான உறுப்பினராகத் திகழ முடியும்.

நமது புரட்சிகர வலிமையின் வளர்ச்சியையும் நமது கட்சியின் கௌரவத்தையும் கண்டு எச்சரிக்கையுறும் எதிரி, ஏஜண்டுகளும் சீனக் கைகூலிகளும் கம்யூனிச எதிர்ப்பு சக்திகளும் கட்சியை அழிக்கத் தீவிரமாக முயலுகிறார்கள். எனவே கட்சியின் இரகசிய நடவடிக்கைகளைத் தளர்த்திக் கொள்ளக் கூடாது. மாறாக, அதைத் தீவிரப்படுத்த வேண்டும்; கட்டுப்பாட்டை இறுக்கமாக்க வேண்டும். கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கும் எதையும், எச்சரிக்கையாக இருப்பதில் ஏற்படும் எந்தவொரு கவனக்குறைவையும் எதிர்த்துப் போராட வேண்டும். இன்றைய சூழலில் இரகசிய வேலைகளில் அவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதில்லை என்றவொரு ஆபத்தான போக்கு சில பகுதியின் கட்சித் தலைமையகங்களில் நிலவுகிறது. இரகசிய நடவடிக்கைகளில் காட்டிய அலட்சியத்தால் கடந்த காலங்களில் நாம் பெற்ற விலையுயர்ந்த படிப்பினைகளை எந்தவொரு கட்சி உறுப்பினரும் மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் தனது அரசியல் விழிப்புணர்வைக் கூர்மையாக்க வேண்டும்; இரகசிய நடவடிக்கைகள் தொடர்பான கட்சிக் கட்டுப்பாட்டை கறாராகப் பின்பற்ற வேண்டும்; இரகசிய வேலைகளை ஆபத்துக்குள்ளாக்கும் அல்லது அலட்சியப்படுத்தும் எந்த ஒரு போக்கையும் எதிர்த்துப் போராட வேண்டும். இந்த வழி மூலமே ஜப்பானிய எதிர்ப்புப் போருக்கான நமது வலிமையைப் பாதுகாக்க முடியும்; கட்சியின் இலட்சியத்தையும் புரட்சியின் வெற்றியையும் உறுதிசெய்ய முடியும். எந்தவொரு கட்சி உறுப்பினரும் கட்சியின் இரகசியங்களைப் பொதுமக்களுக்கோ, தேவையின்றி கட்சியின் இதர உறுப்பினர்களுக்கோ வெளியிடலாகாது. கட்சியின் இரகசிய நடவடிக்கைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயலைச் செய்தவரையும் கட்சிக் கட்டுப்பாட்டின்படி தண்டிக்க வேண்டும். தேவைப்பட்டால் கட்சியை விட்டு வெளியேற்றவும் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

### 4. நமது கட்சியின் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் கட்சி உறுப்பினர் உறுதியுடன் இருக்க வேண்டும்.

கட்சியின் தீர்மானங்களை வார்த்தையளவில் ஆதரிப்பதோடு மட்டும் ஒரு கட்சி உறுப்பினர் திருப்தி அடைந்துவிடக் கூடாது. தனது பணிகளினூடே அந்த தீர்மானங்களை உறுதியுடன் நிறைவேற்றுவதை அவர் தனது கடமையாகக் கொள்ள வேண்டும். இதில் அவர் இடர்ப்பாடுகளையும் பின்னடைவுகளையும் எதிர்கொள்ள நேரிடும். நிலைகுலையாத பொறுமையுடன் இருந்து அவர் இவைகளை வெல்ல முயல வேண்டும். கூலிக்கு அமர்த்தப்பட்ட ஆளைப்போல கட்சி வேலைகளை சிரத்தையில்லாமல் செய்வதைச் சுத்தமாக அனுமதிக்க முடியாது. சீனப் புரட்சி என்ற இலட்சியம் பல ஆண்டுகளுக்குக் கடினமான போராட்டத்தைக் கோருகிற ஒன்றாகும். எத்தனை தியாகங்கள், துயரங்கள் வரும்போதும் உறுதி குலையாமல் இருப்பது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இயல்புகளில் ஒன்றாகும். கட்சியின் சிறப்புமிக்க பாரம்பரியத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் இந்தப் போராட்ட உணர்வைக் கைக்கொள்ள வேண்டும்.

அன்றாட வேலைகளினூடே கட்சியின் தீர்மானங்களை நிறைவேற்ற ஒரு கட்சி உறுப்பினர் உறுதியுடன் இருப்பதோடல்லாமல், நெருக்கடியான சோதனையான காலகட்டங்களிலும் அவ்வாறிருக்க வேண்டும். கட்சிக் கண்காணிப்பில் இருக்கிறபோதும், இல்லாத போதும், வெற்றியின் போதும் தோல்வியின் போதும் அவர் புரட்சிக்கும் கட்சித் தீர்மானங்களுக்கும் நாணயமாக இருக்க வேண்டும். அத்தகைய விடாப்பிடியான அர்ப்பணிப்புத் தன்மை கொண்ட ஒருவரே சிறந்த கட்சி உறுப்பினர் ஆவார்.

### 5. கட்சி உறுப்பினர் மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்.

கட்சியின் அரசியல் செல்வாக்கும் கௌரவமும் அதிகரிக்க அதிகரிக்க பாட்டாளி வர்க்கத்தினரும் மக்களும் அதன் உறுப்பினர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்ப்பார்கள். அவர்கள் கம்யூனிஸ்ட்



கட்சி உறுப்பினர்களாக இருப்பதாலும், மக்களால் நம்பப்படும் முன்னணிப் படையினராக இருப்பதாலும், பிறரைவிட அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. கட்சியை, அதன் உறுப்பினர்களின் நடத்தையிலிருந்தே மக்கள் மதிப்பிடுகிறார்கள். எங்கும் எப்பொழுதும் கட்சி உறுப்பினர்கள் கட்சியின் மீது மக்களிடம் நல்ல அபிப்பிராயம் ஏற்படும்படி நடக்க வேண்டும். அப்பொழுது தான் மக்கள் கட்சியின் மீது அளவு கடந்த நம்பிக்கையையும் உயர்ந்த மரியாதையையும் வைப்பர்.

கட்சி உறுப்பினர்கள் தேசிய விடுதலைக்கான போரில் முன்னுதாரணமிக்க, முன்னணிப் பாத்திரம் வகிக்கும்படி கட்சியின் ஆறாவது மையக்குழுவின் ஆறாவது பிளீனக் கூட்டம் அறைகூவல் விடுத்துள்ளது.

"8-வது மார்க்க மற்றும் புதிய நான்காவது படையில் உள்ள கம்யூனிஸ்டுகள் வீரத்துடன் போரிடுவது, கட்டளைகளை நிறைவேற்றுவது, கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது, அரசியல் வேலை செய்வது மற்றும் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் ஊட்டி வளர்ப்பது ஆகியவை மூலம் எடுத்துக் காட்டுகளாகத் திகழ வேண்டும். நட்புக் கட்சிகள், படைகளுடனான உறவில், ஜப்பானிய எதிர்ப்பில் ஒற்றுமை என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கம்யூனிஸ்டுகள் மேற்கொள்ள வேண்டும்; ஐக்கிய முன்னணியின் திட்டத்தை உயர்த்திப் பிடித்து ஜப்பானிய எதிர்ப்புப் போரை நடத்துவதில் எடுத்துக் காட்டுகளை ஏற்படுத்த வேண்டும். உண்மையைப் பேசி, உறுதியுடன் செயல்பட்டு, கலந்துறவாடுதலில் பணிவாகவும் நாணயமாகவும் இருந்து, நட்புக் கட்சிகள் மற்றும் படைகளுடன் ஒத்துழைத்து, ஐக்கிய முன்னணிக்குள் முன்மாதிரிகளாக உருவெடுக்க வேண்டும். புரட்சிகர அரசாங்கத்தில் பணிபுரியும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் முற்றிலும் நேர்மையாகச் செயல்பட்டு, பணிக்கு ஆட்களை அமர்த்துவதில் விருப்பு வெறுப்பின்றி நடந்து, குறைந்த ஊதியத்திற்கு கடுமையாக உழைக்க முன்வந்து முன்னுதாரணங்களை ஏற்படுத்த வேண்டும். மக்கள் திரள் இயக்கங்களில் செயல்படும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் மக்களின் எஜமானர்



படிப்பகம்

www.padippakam.com

களாக நடக்காமல் நண்பர்களாக நடக்க வேண்டும்; அதிகாரவர்க்க அரசியல்வாதி போலல்லாது சலிப்பேயில்லாத ஆசிரியராகச் செயலாற்ற வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் எந்த நேரத்திலும் ஒரு கம்யூனிஸ்ட் தனது சொந்த நலன்களை முன்னிறுத்தக் கூடாது. தேசத்தின், மக்களின் நலன்களுக்கு அவற்றை அவர் கீழ்ப்படுத்த வேண்டும். எனவே, தன்னலம், சோம்பேறித்தனம், ஊழல், புகழ்தேடுதல் ஆகியவை ஆக மிக இகழ்ச்சிக்குரியவை; தன்னலமின்மை, முழு ஆற்றலை வெளிப்படுத்தி வேலை செய்வது, பொதுக் கடமைக்கு முழுமனதுடன் அர்பணித்தல், கடுமையாக உழைத்தல் முதலியவை மரியாதைக்குரியவையாகும்.''[14]

பருண்மையான வேலைகளைச் செய்வதன் மூலமும் அன்றாட வேலைகள் மூலமும் கம்யூனிஸ்டுகள் இந்த அறைகூவலை உற்சாகத்துடன் ஏற்க வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் புரட்சியின் நலன்களுக்குத் தங்களது அர்ப்பணிப்பின் மூலம் முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும்.

தேசத்தின், மக்களின் இலட்சியத்திற்குத் தங்களை அர்ப்பணிப்பு செய்வதில் அசையாத உறுதியுடன் இருக்க வேண்டும். இதில் மிரட்டல்களோ, இலஞ்சமோ தங்களை உலுக்க அனுமதிக்கக் கூடாது. புரட்சி மற்றும் கட்சி நிலைப்பாட்டை கைவிடுகிற எவரும் கட்சி உறுப்பினர் தகுதியை இழந்தவராகிறார்.

நமது கட்சியின் வரலாற்றில், எந்த வகையான பாதகமான நிலைமையிலும் கம்யூனிசத்திற்காக விடாப்பிடியாகப் போராடிய எண்ணற்ற முன்மாதிரியான கட்சி உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள்; மிரட்டல்கள், ஆசைவார்த்தைக்கு அடிபணியாமல் கட்சிக்கும் புரட்சிக்கும் தங்களது ஆகமிக அர்ப்பணிப்பை நிரூபித்திருக்கிறார்கள். ஆயிரமாயிரம் அற்புதமான கட்சி உறுப்பினர்கள் — தலைவர்கள், கீழ்மட்ட அணிவரிசைகள் என்ற இரு தரப்பிலிருந்தும் — சிறைக் கொட்டடிகளில், தூக்கு மேடைகளில் போர் முன்னணியில் வீரஞ்செறிந்த முறையில் தங்களது இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். அவர்கள் உலகம் முழுவதிலும் சீனத்திலும் உள்ள உழைக்கும்



மக்களுக்கு, சீன தேசத்தின் அற்புதமான மகன்கள் மற்றும் மகள்களின் உயரிய உருக்குலையாத தன்மையை நிரூபித்துள்ளார்கள். அவர்களது மகத்தான பங்களிப்புகள் என்றென்றைக்கும் நினைவிலிருக்கும். எல்லாப் புரட்சியாளர்களுக்கும் அவர்கள் முன்மாதிரிகள். கட்சி உறுப்பினர்கள் அவர்களைப் போற்றுவதோடு அவர்களிடமிருந்து கற்கவும் வேண்டும்.

## 6. கட்சி உறுப்பினர் கற்க வேண்டும்.

புரட்சி எங்குமே ஒரு பிரும்மாண்டமான பணியாகும். குறிப்பாக, சீனாவில் புரட்சிகர நிலைமையும் புரட்சிகர இயக்கமும் மிகமிக சிக்கலானதாகவும் எப்பொழுதும் மாறிக் கொண்டேயிருப்பதாகவும் உள்ளது. இருப்பினும் கம்யூனிஸ்ட் கட்சியானது, மகத்தான புரட்சிகர இயக்கத்தை கட்டுப்பாட்டுடன் எடுத்துச் சென்றுள்ளது; புரட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் வெற்றிக்கு இட்டுச் சென்றுள்ளது. ஏனெனில், அதன் உறுப்பினர்கள் புரட்சிகர தத்துவத்தால் வழிநடத்தப்படுகின்றனர். கட்சி உறுப்பினர்கள், புரட்சிகர தத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கும்போது தான், மிகவும் சிக்கலான நிலைமைகளில் அவர்கள் வழியைக் கண்டறிந்து, எப்போதும் மாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளில் சரியான பாதையைக் கண்டறிந்து, தமக்காக ஒதுக்கப்பட்ட புரட்சிகரக் கடமைகளை நிறைவேற்ற இயலும். அப்படி இல்லையெனில்; அவர்கள் தமது பாதையைத் தவற விட்டுவிடுவார்கள். சுயேச்சையாக வேலை செய்ய அவர்களால் இயலாது; அல்லது, கட்சியின் முடிவுகளையும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளையும் நம்பிக்கைக்குரிய முறையில் நிறைவேற்றுவது இயலாது. எனவே, எப்போதும் எவ்விடத்திலும் தத்துவத்தைக் கற்பதும், ஆற்றும் பணிகளின் ஊடாக பொது அறிவைப் பெறுவதும், இவற்றின் வாயிலாக தனது அரசியல் மற்றும் கல்வி மட்டத்தை உயர்த்திக் கொள்ளுவதும், புரட்சியைப் பற்றிய தனது புரிதலை விரிவுபடுத்திக் கொள்வதும், தனது அரசியல் தொலைநோக்கை வளர்த்துக் கொள்வதும், ஒவ்வொரு கம்யூனிஸ்டுக்கும் அத்தியாவசியமான கடமையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இன்று நிலவுகின்ற சூழ்நிலையில், நாம் கற்க வேண்டியது என்ன?

1. நமது கட்சி ஒரு போர்க்குணமிக்க மார்க்சிய - லெனினியக் கட்சி. ஆகையால், நாம் யாவற்றையும்விட மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கோட்பாடுகளைக் கற்க வேண்டும். அப்பொழுதுதான் உறுதியான கட்சி உணர்வுடைய, உண்மையான தகுதி கொண்ட கட்சி உறுப்பினராக முடியும். நமது கற்றலின் நோக்கம் மார்க்சிய - லெனினியத்தை வறட்டுக் கோட்பாடாக ஒப்புவிப்பதல்ல. மாறாக, மார்க்சிய - லெனினியத்தின் சாரத்தைக் கிரகிப்பதும், பிரச்சினைகளைப் பரிசீலிப்பதற்கு மார்க்சிய - லெனினிய நிலைப்பாடு, கண்ணோட்டம் மற்றும் முறைகளைப் பிரயோகிப்பதைக் கற்றுத் தேறவும்தான்.

2. நாம் சீனத்தின் வரலாற்றையும் இன்றைய அரசியல் சூழ்நிலையையும் கற்க வேண்டும். இல்லாவிட்டால், நம்மால் நிகழ்கால புரட்சிகர பணிகளையும் முறைகளையும் வகுக்க முடியாது.

3. நாம் இராணுவ போர்த் தந்திரங்களையும் நுட்பங்களையும், குறிப்பாக கொரில்லாப் போர்முறைகளையும் கற்க வேண்டும். "கட்சி உறுப்பினர்களை இராணுவமயமாக்குவோம்" என்பது இன்று, மொத்தக் கட்சியின் போராட்ட முழக்கமாக இருக்கின்றது.

4. கல்வியறிவு குறைந்த கட்சி உறுப்பினர்கள் முதலாவதாக, எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளவும், பின்னர் புத்தகங்கள், செய்தி ஏடுகளைப் படிக்கக் கற்றுக் கொள்ளவும் நீண்டகாலம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களின் அரசியல் புரிதலில் மிக விரைந்த முன்னேற்றத்தைக் கொண்டுவர இதுதான் ஒரே வழியாகும்.

5. எனினும், இதையும்விட மிக முக்கியமானது என்னவென்றால், ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் எங்கும் எப்போதும் நடைமுறை வேலைகளிலிருந்தும் மக்களிடமிருந்தும் கற்றுக் கொள்வதாகும். நடைமுறை வேலைகள் மற்றும் மக்கள் திரள் போராட்டங்களிலிருந்து கிடைக்கப்பெறும் அனுபவங்களே நமக்கு மிகச் சிறந்த படிப்பினைகளைத் தருகின்றன.



கட்சி உறுப்பினர்களுக்கு சுயவிமர்சனம் என்பது மிகவும் மதிப்பு வாய்ந்த கற்றுக் கொடுக்கும் கருவியாகும். கட்சியின் விமர்சனத்தைத் திறந்த மனதோடு ஒப்புக் கொள்வது கட்சி உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததாகும். ஒரு சிறந்த கட்சி உறுப்பினர் தனது தவறுகளைத் திருத்திக் கொள்ள கட்சி வைக்கிற விமர்சனங்களைப் புரிந்து கொண்டு அவற்றை நேர்மையுடனும் பாராட்டுதலுடனும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டு எதிரிகள் உண்டு. அவை அகந்தையும், மெத்தனமும் ஆகும். ஒருபுறம் நாம் கற்பதற்கான தேவை குறித்த மிகை நம்பிக்கையையும் சுயதிருப்தியையும் எதிர்க்கிறோம். இன்னொருபுறம், கற்பது குறித்த அவநம்பிக்கையை அல்லது கற்பதற்கு நேரம் ஒதுக்காமையை எதிர்க்கிறோம். கட்சி உறுப்பினர்களுக்கு நீண்டகாலம் வகுப்பறைகளில் உட்கார்ந்து படிப்பதற்கான வாய்ப்பு மிக அரிதாகும்; எனவே, அவர்கள் தங்களது சுறுசுறுப்பான வேலைத் திட்டத்தின் ஊடேயும் சுயகல்விக்கு நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும். இதற்காக விடாமுயற்சியுடன் செயல்படுவது வேண்டும்.

கட்சி உறுப்பினர்களுக்கான நமது முழக்கம்: கற்றுக் கொள்ளுங்கள், கற்றுக் கொள்ளுங்கள் மீண்டும் கற்றுக் கொள்ளுங்கள். மையக் குழுவின் ஆறாவது பிளீன கூட்டத் தொடரின் அறைகூவலான "கற்றுக் கொள்வதில் தீராத தாகம்", "கற்றுக் கொடுப்பதில் சளையாமை"[15] என்பதை ஒட்டுமொத்த உறுப்பினர்களும் உற்சாகமாக ஏற்க வேண்டும்.

இந்த ஆறு தேவைகளையும் நிறைவேற்றுபவரே மாபெரும், புகழ்மிக்க கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயருக்கு எவ்வித களங்கமும் விளைவிக்காத சிறந்த உறுப்பினராவார்.

## குறிப்புகள்

1. இங்கு குறிப்பிடப்படும் கட்சி அமைப்பு விதிகள் 1928 ஜூலையில் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது தேசியப் பேராயத்தில் நிறைவேற்றப்பட்டதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

2. மூன்றாவது கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆங்கிலப் பெயரின் சுருக்கமாகும். Communist International என்பதன் சுருக்கமான 'Comintern' என்பதைக் குறிக்கிறது.

3. ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியான ரசிய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி 1898 மார்ச்சில் நிறுவப்பட்டது. 1903-இல் நடந்த அதன் இரண்டாவது பேராயத்தில் கட்சி இரண்டு குழுக்களாக பிளவுற்றது. பெரும்பான்மை என்பதைக் குறிக்கும் "போல்ஷ்விக்" எனவும் சிறு பான்மை என்பதைக் குறிக்கும் "மென்ஷ்விக்" எனவும் கட்சி பிளவுற்றது. 1912-இல் நடைபெற்ற ஆறாவது தேசிய மாநாட்டில் மென்ஷ்விக்குகளை கட்சியை விட்டு விரட்டியடிப்பது என முடிவெடுக்கப்பட்டது. லெனின் தலைமையிலான போல்ஷ்விக்குகள் ரசிய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி (போல்ஷ்விக்) என்ற பெயரில் தனியொரு மார்க்சியக் கட்சியாக செயல்படத் தொடங்கினார்கள். 1918-இல், அதனுடைய ஏழாவது பேராயத்தில் கட்சியானது ரசிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்) எனப் பெயர் மாறியது. 1925-இல் நடந்த 14-வது பேராயத்தில், சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சி (போல்ஷ்விக்) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1932-இல் நடந்த 19-வது பேராயத்தில், போல்ஷ்விக் என்ற வார்த்தை நீக்கப்பட்டு சோவியத் ஒன்றிய கம்யூனிஸ்ட் கட்சி என்று பெயரிடப்பட்டது.

4. எல். மார்டோவ் (1873-1923) ரசியாவில் இருந்த மென்ஷ்விக் தலைவர்களில் ஒருவராவார். 1917 அக்டோபர் புரட்சிக்குப் பின், சோவியத் ஆட்சிக்கு எதிராக பகைமையான நிலையை மேற்கொண்டார். 1920-இல் அவர் வெளிநாட்டிற்கு ஓடிவிட்டார்.

5. இந்த சொற்றொடரை லெனின், ரசிய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது பேராயத்தில் குறிப்பிட்டார். பார்க்க, லெனின் தொகுப்பு நூல்கள், 1961-இல் மாஸ்கோ அயல் மொழி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது; தொகுதி VI பக். 502.

6. லி ஹன்ஜன் (1890-1927), ஹுபே பிராந்தியம், கியான்ஜியாங் என்ற இடத்தில் பிறந்தவர். 1920-இல் இவர் ஷங்காய் குழுவில் உறுப்பினரா னார்; சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவ உதவியவர். 1921-இல் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் பேராயத்தில் கலந்து கொண்டார்; ஆனால் பின்னர் கட்சியை விட்டு வெளியேறிவிட்டார். ஹுபே பிராந்தியம், ஹன்கொவ் என்ற இடத்தில், 1927 டிசம்பரில் குவாங்சி யுத்தப் பிரபுக்களால் கொல்லப்பட்டார்.



7. 1921-இல், *சீனக்* கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேசியப் பேராயம் *சீனக்* கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கட்சித் திட்டத்தை வகுத்தது. 1923-இல் அதன் மூன்றாவது தேசியப் பேராயத்தில் ஒரு புதிய நகல் திட்டத்தை வகுத்தது. 1939-இல், இந்தக் கட்டுரை எழுதும் சமயத்தில், தனக்காக ஒரு முழுமையான திட்டத்தை கட்சி இன்னும் வந்தடையாமல் இருந்தது. 1945-இல் நடந்த கட்சியின் ஏழாவது தேசியப் பேராயத்தில் தான் கட்சியின் அமைப்பு விதிகளுக்கு ஒரு முகப்புரையாக ஒரு பொதுத் திட்டம் வகுக்கப்பட்டது. அதுவே கட்சியின் அடிப்படைத் திட்டமாகவும் கட்சி அமைப்பு விதிகளின் பொதுக் கோட்பாடுகளாகவும் செயலாற்றியது.

8. மூன்றாவது அகிலத்தின் (கோமின்டெர்னின்) செயல்திட்டம் 1919 மார்ச்சில், மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு அகிலத்தின் முதல் பேராயத்தில் நிறைவேற்றப்பட்டது.

9. ஜப்பானிய எதிர்ப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு பத்து அம்சத் திட்டம் 1937 ஆகஸ்டில், வடக்கு ஷான்சி, லிவோசுனில் நடைபெற்ற *சீனக்* கம்யூனிஸ்ட் கட்சியின் மையக் குழுவின் அரசியல் தலைமைக் குழுவின் விரிவாக்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. அத்திட்டம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது. i. ஜப்பானிய ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவது, ii. மொத்த நாட்டின் இராணுவ பலத்தையும் திரட்டுதல், iii. மொத்த நாட்டின் மக்களைத் திரட்டுவது, iv. அரசாங்க பொறியமைவைச் சீரமைப்பது. v. ஜப்பானிய எதிர்ப்பு அயல்நாட்டுக் கொள்கையை உருவாக்குதல். vi. ஜப்பானை எதிர்ப்பதற்காக போர்க்கால நிதி மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குதல். vii. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல். viii. ஜப்பானிய எதிர்ப்பு கல்விக் கொள்கையை உருவாக்குதல். ix. ஜப்பானின் சீனக் கூட்டாளிகள், துரோகிகள், ஜப்பானிய ஆதரவு சக்திகளை ஒழித்தல் மற்றும் பின்னணிப் பகுதிகளை உறுதிப்படுத்துதல். x. ஜப்பானுக்கு எதிராக தேசிய ஐக்கியம். பார்க்க: "எதிர்ப்புப் போரின் வெற்றிக்காக தேசத்தின் எல்லாச் சக்திகளையும் அணி திரட்டுவது தொடர்பாக", மாசேதுங் — தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், பீஜிங் அயல் மொழி பதிப்பகம், தொகுதி II, பக். 25-28.

10. ஜே.வி. ஸ்டாலின் எழுதிய "லெனினியத்தின் அடிப்படைகள்" என்ற கட்டுரை; பீஜிங் அயல் மொழி பதிப்பக வெளியீடான "லெனினியத்தின் பிரச்சினைகள்" என்ற நூலில், பக். 99.



படிப்பகம்

www.padippakam.com

11. 1923-இல் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது தேசியப் பேராயத்தில் ஏற்கப்பட்ட "சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்தப்பட்ட முதல் அமைப்பு விதிகளில்"தான் தேர்வுநிலை உறுப்பினர்கள் பற்றிய பிரிவு முதன்முதலில் புகுத்தப்பட்டது. 1928-இல் நடைபெற்ற கட்சியின் ஆறாவது தேசிய பேராயத்தில் நிறைவேற்றப்பட்ட கட்சி விதியிலிருந்து இது நீக்கப்பட்டது. ஆனால் பின்னர், மையக் குழுவின் முடிவின்படி மீண்டும் சேர்க்கப்பட்டது. தேர்வுநிலைக் காலம் எல்லா சமயங்களிலும் ஒரே அளவாக இல்லாமல் அவ்வப்போது மாற்றப்பட்டது. 1956-இல் நடைபெற்ற கட்சியின் எட்டாவது தேசியப் பேராயத்தில் நிறைவேற்றிய கட்சி அமைப்பு விதிகளில் 'தேர்வு நிலை உறுப்பினர்' என்ற சொற்றொடர் 'பயிற்சி உறுப்பினர்' என்றும் 'தேர்வுநிலைக் காலம்' என்பது 'பயிற்சிக் காலம்' என்றும் மாற்றப்பட்டது. பயிற்சிக் காலம் ஓராண்டு முடிவதற்கு முன்பாக புதிதாக சேர்க்கப்பட்டவர்கள் எவரையும் முழு உறுப்பினராக மாற்றக்கூடாது என்று இந்த அமைப்பு விதிகளில்தான் விதிமுறை செய்யப்பட்டது. 1982-இல் 12-வது தேசியப் பேரவையில் நிறைவேற்றப் பட்ட அமைப்பு விதிகள் இந்த விதிமுறையையே கொண்டிருந்தது.

12. சென் டு சியு (1878-1942) அந்துய் பிராந்தியத்திற்கு உட்பட்ட ஹீவாய்னிங் என்ற இடத்தில் பிறந்து வளர்ந்தவர். 'யூத்' (இளமை) பின்னர் 'நியூ யூத்' (புதிய இளமை) என்றழைக்கப்பட்ட ஏடுகளின் ஆசிரியராக 1915 செப்டம்பரில் பணியாற்றினார். பின்னர் 1918-இல் லி டேஷ்ஹோ என்பவருடன் சேர்ந்து 'வீக்லி ரிவ்யூ' என்ற ஏட்டை நிறுவினார். புதிய பண்பாட்டிற்காக வாதாடியவர்களில் இவரும் ஒருவர். மே 4 புதிய பண்பாட்டு இயக்கத்தின் முதன்மைத் தலைவர்களில் இவரும் ஒருவர். மே 4 இயக்கத்திற்குப் பின் இவர் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டு அதைப் பரப்பினார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவிய முதன்மைத் தலைவர்களில் இவரும் ஒருவர். முதல் - ஆறு ஆண்டுகள் அதன் தலைவராக இருந்தவர். முதல் புரட்சிகர உள்நாட்டுப் போரின் (1924-27) கடைசிக் கட்டத்தில் இவர் ஒரு பாரதூரமான வலது சரணாகதி தவறிழைத்தார். பின்னர் இவர் புரட்சியின் எதிர்காலத்தின் மீது நம்பிக்கை யிழந்து டிராட்ஸ்கியவாதிகளின் கருத்துகளைத் தழுவினார். இவர் கட்சிக்குள்ளேயே ஒரு கோஷ்டியை உருவாக்கி கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கினார். இதனால் 1929 நவம்பரில் கட்சியிலி ருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் இவர் வெளிப்படையாக ஒரு டிராட்ஸ்கியவாத அமைப்பில் இணைந்து செயல்பட்டார். 1932-இல் இவர் கொமிண்டாங் அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார். 1937 ஆகஸ்டில் விடுதலையான இவர் 1942-இல் சிச்சுன் பிராந்தியம், ஜியாங்ஜின் என்ற இடத்தில் நோய் காரணமாக இறந்தார்.



13. சாங் கோ தா (1897-1979), ஜியாங்சி பிராந்தியம், பிங்க்சியாங் என்ற இடத்தைச் சேர்ந்தவர். 1921-இல் நடந்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் தேசியப் பேராயத்தில் கலந்து கொண்டார். இவர் கட்சியின் மையக் குழுவிற்கும் பின்னர் அரசியல் தலைமைக் குழுவிற்கும் அதன் உயர்நிலை குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1931-இல் இவர் மையக்குழுவின் ஹுபே - ஹேனான் - அன்ஹுய் பகுதி துணைக் குழுவின் செயலாளராகவும் சீன சோவியத் குடியரசின் தற்காலிக மத்திய அரசாங்கத்தின் துணைத் தலைவராகவும் செயலாற்றினார். 1935 ஜூனில், சிச்சுன் பிராந்தியம் மாவோகாங் பகுதியின் நான்காவது முன்னணிப் படையுடன் செம்படையின் முதலாவது முன்னணிப் படை இணைந்த போது இவர் செம்படையின் பொது அரசியல் ஆலோசகராக ஆனார். செம்படை தனது வடக்குப் பயணத்தைத் தொடர வேண்டுமென்ற மையக் குழுவின் முடிவை எதிர்த்த இவர் கட்சியையும் செம்படையையும் பிளவுபடுத்த முயன்று தனியாக ஒரு 'கட்சி மையக் குழுவை' ஏற்படுத்தினார். 1936 ஜூனில் தனியான இந்த 'கட்சி மையக் குழுவை' கைவிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட இவர் இரண்டாவது மற்றும் நான்காவது முன்னணிப் படைகளுடன் இணைந்து டிசம்பரில் வடக்கு ஷென்சி பகுதியைச் சென்றடைந்தார். 1937 செப்டம்பரில் இவர், ஷென்சி-கன்சு-நிங்சியா எல்லைப் பகுதி அரசாங்கத்தின் துணைத் தலைவராகவும் பின்னர் அதன் தற்காலிகத் தலைவராகவும் ஆனார். 1938 ஏப்ரலில் ஹுவாங்டி என்ற மஞ்சள் பேரரசரின் கல்லறையை சுத்தம் செய்வது என்ற மரபுவழி விழாவில் கலந்து கொள்வதாக சொல்லிவிட்டுச் சென்ற இவர் ஷியானுக்கு ஓடினார். பின்னர் வூஹானுக்குச் சென்ற இவர் கோமிண்டாங்கின் இரகசிய போலீசில் சேர்ந்தார். இவ்வாறு சீனப் புரட்சியிலிருந்து ஓடுகாலியாகிப் போன இவர் கட்சியிலிருந்து வெளி யேற்றப்பட்டார். 1979-இல் கனடாவில் இவர் இறந்து போனார்.

14. இந்த மேற்கோள் மாவோ எழுதிய "தேசிய யுத்தத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம்" என்ற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது. பீஜிங் அயல் மொழி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்ட மாவோவின் தேர்ந்தெ டுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி II, பக். 197-98-ல் இது உள்ளது.

15. மேலே சொன்ன கட்டுரை, பக். 210.



படிப்பகம்

www.padippakam.com

## எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| ❋ மார்க்சிய மூலநூல்களுக்கு வாசகர் வழிகாட்டி – மாரிஸ் கார்ன்ஃபோர்த் | ரூ. | 35.00 |
| ❋ வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும் | ரூ. | 70.00 |
| ❋ மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை – ஜார்ஜ் தாம்சன் | ரூ. | 40.00 |
| ❋ தலித் அரங்கியல் முனைவர் கே.ஏ. குணசேகரன் | ரூ. | 16.00 |
| ❋ கம்யூனிசம் தோற்றதாம் முதலாளித்துவம் வென்றதா? | ரூ. | 6.00 |
| ❋ மாசேதுங் மேற்கோள்கள் | ரூ. | 50.00 |
| ❋ மாவோவின் மூன்று சொற்பொழிவுகள் | ரூ. | 8.00 |

படிப்பகம்

www.padippakam.com

கீழைக் காற்று

படிப்பகம்